நாவலர் மலர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின்

60வது ஆண்டு நிறைவு விழா

ஞாபகார்த்த வெளியீடு



THE REGISTRAR OF BOOKS
18 FEB 1944
MADRAS

திரு. வி. க. நீடூழி வாழ்க.

நவபாரத தமிழ் சங்கம், திருச்சிராப்பள்ளி.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

ஞாபகார்த்த

தமிழ்ப் பரிசு ரூ. 1000 (ஆயிரம்)

ஸ்ரீ திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

ஞாபகார்த்த

இசைத் தமிழ் பரிசு

ரூ. 1000 (ஆயிரம்)

ஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள்

ஞாபகார்த்த

சைவ சித்தாந்த சாத்திரப் பரிசு

ரூ 1000 (ஆயிரம்)

விவரங்களுக்கு:—

தஞ்சாவூர் ஜில்லா திருப்பனந்தாள் காசி மடத்திற்கு

எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

நாவலர் திரு. வி. க.

16 FEB 1944

நமது தாய்த்திரு நாட்டிற்கும் தமிழன்னைக்கும் பெருந் தொண்டாற்றிவரும் நாவலர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. அவர் மொழிக்கும் சமூகத்துக்கும் செய் துள்ள சேவை அனந்தம். 'தேச பக்தன்,' 'நவசக்தி' மூலம் அவர் ஆற்றிய தொண்டுகள் அநேகம்.

திரு. வி. க., மக்களை அவர்கள் கொண்ட குறிக் கோளிலே சென்றெய்துமாறு முன்னின்று நடத்தவல்ல தலைமைக்கட்குரிய பண்புகள் பலவும் இயல்பாகவே வாய்க் கப்பெற்றவர். உள்ளொளியுடையவர், பரந்த நோக்க முடையவர். அறிவு சான்றவர், உறுதி படைத்தவர். ஆற்றல் மிக்கவர். அன்பு நிறைந்தவர். சொல்வன்மை படைத்தவர்.

திரு. வி. க. தமது அழகான பேச்சினால், வீராவேச மான தமிழ்ச் சொல் அடுக்கினால், எல்லோருக்கும் புரியும் படியான தமிழ் பாஷையினால் இருண்ட தமிழ் உலகைப் பிரகாசிக்கச் செய்தார். ஆங்கிலப் பேச்சினால் மக்களை மயக்கிக்கொண்டிருந்த அக்காலத்தில், தமது அழகான தமிழ் பேச்சினால், மக்களை தட்டி எழுப்பி சண்டமாருதம் செய்யவிட்ட திரு. வி. க. அவர்களை என்றும் தமிழ் உலகம் மறக்கமுடியாது.

தமிழருக்குப் புதுவழி காட்டி எல்லாத் துறைகளிலும் பண்புறப் பணிசெய்த ஒப்புரவாளராகிய திரு. வி. க. அவர்கட்கு, 25-8-43ம் தேதி அறுபதாண்டு நிறைவாகிறது. இது கிடைத்தற்கரிய பாக்கியமாகும். தமிழர்களாகிய நாம் திரு. வி. க. அவர்களைத் தக்கபடி கௌரவிக்க வேண்டும்.

திரு. வி. க. அவர்களைப்பற்றி தமிழன்பர்கள் எழுதிய வற்றை ஒருங்கு சேர்த்து "நாவலர் மலர்" என்று மகுட மிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இதற்கு விஷயதானம் புரிந்து உதவிய அறிஞர்கள், விளம்பரம் கொடுத்துதவிய அன்பர்கள், அனைவருக்கும், எமது மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம். திரு. வி. க. நீடூழி வாழ்க!

திரு. வி. கலியாணசுந்திர முதலியார்

வ. ரா.

பாலுக்கு நிகரான கதர் உடையைத் தரித்துக்கொண்டு, இடதுகை ஆட்காட்டி விரலால், எச்சரிக்கை பாணப் பிரயோகம் செய்வது போல, உச்சிக்குடுமி சகிதமாய், நெற்றியில் அழகான சந்தனப்பொட்டுத் துலங்க, அதோ, தேன் மொழிப் பிரசங்கம் செய்கிறாரே, அவரை உங்களுக்குத் தெரியுமா? அவர்தான், குழைந்து குழைந்து கொஞ்சுவதைப் போலப் பேசும் கலியாணசுந்தர முதலியார். வாய் தான் வலிக்காதா? வார்த்தைக்கேனும் தடை கிடையாதா? ராமஸ்வாமி நாய்க்கரின் பிரசங்கம் கூடுவாய் மூலை மழை; அது கடகடவென்று கொட்டித் தீர்த்துவிடும். வியர்க்கும் உடலை குளிரக் குளிர இன்புறச் செய்யும் தென்றல் காற்றைப் போன்றது முதலியாரின் சொற்பொழிவு.

முதலியார் சாது; அவருடைய அச்சுக்கூடத்துக்கும், சாது அச்சுக்கூடம் என்று பெயர். முதலியாரின் முகத்தைக் கண்டவர்களுக்கு, அவரோடு சண்டை போட வேண்டும் என்றே தோன்றாது மழலையைப் பேசும் குழந்தைகளுடனே, எவரேனும் சண்டை போடத் துணிவார்களா? அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வங்களாக கருதிக் கொண்டாடும் குழந்தையைப் பார்த்தால், யாருக்குத்தான் இரக்கம் உண்டாகாது? சூதுக் கலப்பில்லாத குழந்தையின் முகவிலாஸ பாக்கியம் படைத்தவர் முதலியார். இந்த பாக்கியம் அவரது பெற்றோர்களின் குண விசேஷங்களின் பயனோ, அல்லது முதலியாரின் உள்ளத்தின் பயிற்சிப்பயனோ, அது எதுவென்று என்னால் விளக்கி, விவரமாய்ச் சொல்ல முடியவில்லை.

சேலம் விஜயராகவாச்சாரி யாருக்குப் பெஸண்டு அம்மையாரிடம் எவ்வளவு ஆத்திரமோ, அவ்வளவு ஆர்வம் கலந்த அன்பும் மதிப்பும், முதலியாருக்கு, அம்மையாரின் பேரில். இதற்கு நியாயமுண்டு. முதலியார் அவர்கள், அரசியல் உலகில் அடி வைத்ததற்கு, பெஸண்டு அம்மையார்தான் காரணம். சென்னை வெஸ்லி காலேஜில் தமிழ் பண்டிதராயிருந்த முதலியாருக்கு, அரசியல் வானத்தின் அழகுக் கவர்ச்சி கண்ணில் பட காரணமில்லை. "டாக்டர்" என்று பரம் பரைப் பட்டப்பெயர் வாங்கிய, வாத்திமார்கள்—கனம் சீனிவாச சாஸ்திரியாரைத் தவிர—அரசியலில், நமது தேசத்தில் கலந்து கொண்டு, பெயர் வாங்கினதே யில்லை. கலியாண சுந்தர முதலியார் அவர்களைப் பார்த்த பின்னர், "கற்பனையில்லாத தமிழ்ப்

பண்டிதர்" என்று புலவர்களைக் கடியும் வழக்கத்தை விடத்தான் வேண்டும். என்ன செய்வது?

பெஸண்டு அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கக் காலத்திலேயே, வெளிவரவேண்டும் என்ற ஆவல் முதலியாருக்கு ஏற்பட்டுவிட்டது. நல்ல காரியம் செய்வதில் பலபேர்களுக்கு ஆவலும் ஆர்வமும் இருக்கலாம். ஆனால் சமையலறை அடுப்பில், பூனை படுத்துறங்கக் கூடிய வறுமைக்கு ஆட்பட்டவர்கள், குடித்தனத்தைக் கவனிப்பார்களா, அல்லது கொடுங்கோலனை எதிர்ப்பார்களா? எப்பொழுதுமே வயிற்றுக்கும் இலட்சியத்துக்கும் ஓயாத போராட்டம். வயிறு தற்காப்பு யோசனை சொல்லும்; இலட்சியமோ, காதற் கன்னிகையைப்போல, கடைக்கண்ணால், ஜாடை செய்து, சமிக்கினை காட்டி, ஆளை உருக்கிவிடும்.

வயிறை ஜயித்தவன் வீரன். வயிற்றுக்குப் பணிந்தவன்— "வவுரன்" (வயிறன்). வயிறு, "குழந்தை குட்டிகளை"க் காட்டி, குடித்தனச் சுமையை கடமையாக அலங்காரம்செய்து, தன் தற்காப்புக் கட்சிக்கு, கோட்டை அரண் செய்து கொள்ளுகிறது. இலட்சியமோ, மனிதனுக்குக் கற்பனை, தியாகம் முதலிய இறக்கைகளைக் கொடுத்து, வயிற்றுக் கோட்டைக்கு வெளியே பறக்கத் தூண்டுகிறது. இவை இரண்டுக்கும் நடுவே, அகப்பட்டுக் கொண்டு, சதா தர்ம சங்கட மந்திரம் ஜபித்துக்கொண்டிருப்பவர் முதலியார். சாதாரண மனிதனுக்கு எளிதாகத் தோன்றும் காரியங்கள் யாவும், முதலியார் அவர்களின் கண்களில் வகுத்துப் பிரிக்கமுடியாத தர்ம சங்கடங்களாகத் தோன்றும். இது கற்பனை மிகுதியும் கலந்த இரக்கத்தின் கோளாறாகும்.

தம்மிடம் பெண் தன்மை நிறைந்திருக்கிறது என்று முதலியார் சிறிதளவு பெருமையாகவும் பெரிதும்கேலியாகவும்சொல்லிக் கொள்ளுவதுண்டு பெண் தன்மை இல்லாத ஆணுக்கு வசீகர சக்தி கிடையாது என்று முதலியார் நண்பர்களிடம் பலகாலும் சம்பாஷணைப் பிரசங்கம் செய்வார். அவர், இதை, தம்மைப் பற்றித்தானே சொல்லிக் கொள்ளுகிறார் என்கிற சந்தேகம், கேட்பவர்களின் மனதில், நிச்சயமாய்த் தோன்றும். மனக் கொடுமையினால் எவனும் வீரனாவதில்லை. துணிவுக்கும் இரக்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு (தொடர்பு என்று சொல்லவேண்டும் என, முதலியார் அவர்கள் என்னைக் கடிந்து பார்க்கிறாப்போலத் தோன்றுகிறது.) அறிவுக்கும் கோழைத் தனத்துக்கும் சம்பந்தம் உண்டு. எனவே, எதிரிடைகளைப் போலப் பார்வைக்குப் படும், "ஆணில் பெண்தன்மை" உண்டு. "பெண்ணில் ஆண் தன்மை" உண்டு. இந்த இயற்கை விநோதத்தை சில

மலர்களிலே காணலாம். முதலியாரின் ஆண்தன்மை, "வீட்டை விட்டு வெளியே போய், வீர வாழ்வு வாழ்வாயாக" என்று அவரை அதட்டுகின்றது. "வெளியே போனால் வீடு பாழாய்ப்போகும். வீட்டுப் பொறுப்பை மறக்காதே" என்று அவருடைய பெண் தன்மை அவருக்கு இங்கிதக் குரலில் இதோபதேசம் செய்கின்றது. என்ன தர்மசங்கடமான "ஆண் பெண்" தன்மை! வீட்டுக்கும் நாட்டுக்கும் இடையே நசுக்குண்டு, கரைந்து கரைந்து உருகுகின்றார் முதலியார் அவர்கள்.

தனித்து இயங்கும் தனி மொழி என்று பண்டிதர்கள் பலர் கூச்சலிடும் கூச்சலை பேருண்மை என்று முதலியார் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. தமிழ் பாஷை வளர வேண்டும் என்ற ஆசை, முதலியாரின் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில், காலியிடம் துளிக்கூட இல்லாமல், அவர் தேகமுழுதும் நிறைந்து நிற்கின்றது. திசைச்சொற்களும் வழக்கச்சொற்களும் கிராமியப் பேச்சும், தமிழ்மொழியில் கலந்துகொண்டாலொழிய, தமிழுக்கு நவநாகரிகச்சிறப்பும் மதிப்பும் வன்மையும் வளர்ச்சியும் ஏற்படமாட்டா என்பது முதலியாரின் திடநம்பிக்கை. இதிலும் அவரது இயல்பான தருமசங்கட உள்ளம் அவரைப் பெரிதும் வேதனை செய்கின்றது.

தமிழ் நாட்டு அரசியல் உலகில், தலைமைப் பதவி சம்பந்தமாக ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாருக்கும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கும் இடையே சிறிது "ஊடல்." (எனக்கும் சிறிது சிறிதாக முதலியாரின் பதப் பிரயோகம் வருகிறது!) "சீனிவாசய்யங்கார் நல்லவர்; ஆச்சாரியார் பெரியவர். யாரைத் தள்ளி, யாரைக்கொள்ளுகிறது" என்ற தர்ம சங்கடம் முதலியாருக்கு முன்னே ஒரு காலம் பிரமாதமாய் உரு எடுத்து நின்று அட்டஹாசம் செய்தது. தர்ம சங்கடத்தை இவர் சப்பந்தப்பட்ட வரையில் பெரிதும் வளர்த்தது என்றே சொல்ல வேண்டும்.

தூய தமிழின் இன்னிசை ஒலியைக் கேட்டு அனுபவிக்க உளங்கொண்டவர்கள், முதலியார் நடத்திவந்த "தேசபக்தன்" என்ற பத்திரிகையின் பழைய பிரதிகளைக் கண்டெடுத்து படிப்பார்களானால், மனப் பூரிப்பு அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழிலும் ஒலியழகு, நடையழகு, பொருளழகு, வர்ணனை அழகு உண்டோ என்று சந்தேகப்படும் ஆத்மாக்கள் முதலியாரின் 'முருகன்' என்ற சிறு நூலைப் படித்து மனம் தேறலாம். முதலியார் கொஞ்சி நடையழகு பயிலும் நிகண்டு, அழகுபட ஒலிக்கும் அகராதி. முதலியார் பொருள் செறிவுடன் பேசும் புலவர். பழைய தமிழ் நாகரிகத்துக்கும், புதிதாய்த் தோன்றி யிருக்கும்

நவநாகரிகத்துக்கும் இடையே நின்று ஊசலாடுபவர் முதலியார். இதிலும் தர்ம சங்கடம்தான்.

முதலியார் தொழிலாளிகளின் சகோதரன்; முதலாளிகளின் தோழன். இளைஞர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் இங்கித நண்பன். சலிக்காமல் பேசும் கிழவர்களுக்கு அலுப்பின்றிக் காது கொடுத்துக் கேட்கும் பக்தன். பண்டிதர்களுக்குப் பிரதிநிதி, பெண்களுக்கு நல்லுபதேசம் செய்யும் சாது. அறப்போர் நிகழ்த்தும் காந்தியடிகளின் சத்தியாக்கிரக சாஸ்திரத்தின் அநுபவத்தை அறிந்தவர் முதலியார்.

முதலியாருக்கு நோயைப்பற்றிப் பேசுவதில் என்ன ஆசை? வாகட சாஸ்திரத்தை இதற்கெனப் படித்திருக்கிறாரோ என்னவோ? என்ன சொல்லி என்ன? பழைய படிப்பிலும் பிடிப்பிலும் வளர்ந்த முதலியார் தேசிய இயக்கத்திலும், சாதுக்களின் சங்கத்திலும், மணம் கமழும் மலர் என விரிந்திருக்கிறார். அவருடன் சம்பாஷணை செய்வது நல்விருந்தாகும். அவருடைய பிரசங்கத்தைக் கேட்டால் உள்ளம் குளிரும். "செவிக்குணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்ற திருக்குறளுக்கு இலக்கியமாய் வாழ்ந்து, விளங்குகின்றார் முதலியார். சமரச சன்மார்க்கக் கழனியில், அவர் நீண்ட காலம் உழைப்பாராக!

வாழ்க முதலியார்!

கிளி

1. பச்சைக் கிளியே வாவா
பாலுஞ் சோறு முண்ணவா
கொச்சி மஞ்சள் பூசவா
கொஞ்சி விளை யாடவா.

2. கவலை யெல்லாம் நீங்கவே
களிப்பெ ழுந்து பொங்கவே
பவழ வாய் திறந்துநீ
பாடு வாயோ தத்தம்மா.

3. பையப் பையப் பறந்துவா
பாடிப் பாடிக் களித்துவா
கையில் வந் திருக்கவா
கனிய ருந்த ஓடிவா.

வாழ்க முதலியார்

(நாமக்கல் கவி. வெ. இராமலிங்கன்)

சலியாத சேவையும் தளராத ஊக்கமும்
தணியாத ஆர்வ முள்ளோன்;
நலியாத சொற்களால் **நவசக்தி** யூட்டிடும்
நயமிக்க **தேசபக்தன்**;
நிலையான கல்வியின் நெளியாத கொள்கையின்
நேரான நெறியில் நிற்போன்;
கலியாணசுந்திர முதலியார் தமிழன்பர்
கண்ணான ஒருவனாகும்.

பாடெலாம் தான்பட்டுப் பலனெலாம் பிறர்கொள்ளப்
பங்கின்றி உதவுபண்பன்;
ஏடெலாம் மேல் எனும் 'என்கடன் பணி செய்தல்'
என்பதே எண்ணி யெண்ணி
நாடெலாம் வாழவே நாளெலாம் தன் சுகம்
நாடாது பாடுபடுவோன்;
வீடெலாம் தமிழ்மக்கள் கலியாணசுந்தரன்
வெற்றி கொண்டாடவேண்டும்.

கொல்லாமை பொய்யுரை கூறாமை என்பதே
குறியாகக் கொண்டதமிழை
கல்லாத பேர்களும் களி கொள்ளத்தந்திடும்
கலியாண சுந்தரத்தின்
செல்லான அறுபதாம் ஆண்டுத்திருநாளிலே
தெய்வத்தைச் சிந்தை செய்து
வல்லாண்மை குறையாமல் நூறாண்டும் அவன்வாழ
மனமார வாழ்த்துகின்றோம்.

-சக்தி

திரு. வி. க. நீடூழி வாழ்க!

(ஸ்ரீமதி T. S. ஜானகி அம்மாள்)

உலகத்தில் அரியதெது என்று ஆராயப்புகுந்தால், "அரிதரிது மானிடராதல் அரிது" என்ற ஔவையாரின் அற்புதத் திருவாக்கு ஞாபகத்துக்கு வருகிறது. உலகத்தில் சகல ஜீவராசிகளிலும் மானிடனே உயர்ந்தவனுகிருனென்று கூறியதின் காரணம் என்னவென்று யோசிக்கும்பொழுது மற்றப் பிராணிகளிடத்திலில்லாத பகுத்தறிவு என்னும் ஓர் அரிய பொருள் மனிதனிடமிருப்பதுதான் என்று தெரிகிறது. மானிட ஜென்மம் எடுத்தது மட்டும் போதாது. "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற பெரியோர் வாக்கின்படி புகழுடம்பெடுக்கவேண்டும். புகழுடம்பைப் பெற ஒரு மனிதன் விரும்புவானுனுல் அவனிடம் ஞானமும் கல்வியும் இருக்க வேண்டும்.

அங்ஙனம் புகழுடம்பெடுத்த புண்ணியர்களுக்குள் ஒருவராக வைத்துப் பேசும்படியான பாக்கியம் பெற்றவர் **திரு. வி. கலியாணசுந்திர முதலியார் அவர்கள்** என்பது தமிழபிமானிகளுக்கு நன்கு தெரியும்.

நாற்பத்தைந்து வருடகாலமாகத் தளரா ஊக்கத்துடனும், கழிபேருவகையுடனும் திரு. வி. க., தமிழ்நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும், தமிழனுக்கும் தொண்டாற்றிவருகிருர்.

திரு. வி. க., தமிழுக்குச் செய்துள்ள தொண்டு அளப்பரியது. அவர் எழுதிய நூல்கள் படிக்கப்படிக்க இனிக்கும். மிகவும் ஆழ்ந்து கற்கவேண்டிய நூல்களில் திரு. வி. க. நூல்களும் சேரும்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

என்ற பொய்யா மொழியைப் பொய்யாமல் இலங்கும்படி செய்யும் பெரியார் திரு. வி. க. அவர் தமது நண்பர்களைக்

கண்டால் மனப்பூர்வமான அன்புடன் பேசுவார். திரு. வி. க. வுடன் எவ்வளவு பேசினாலும் சலிப்பென்பதே ஏற்படாது. கேட்கக் கேட்கத் தெவிட்டாது.

நிகரற்ற செந்தமிழ் நாவலராகிய திரு. வி. க. அவர்களுக்கு அறுபதாண்டு 25உ நிறைவாகிறது. இது கிடைத்தற்கரிய பாக்கியமாகும். சஷ்டி அப்தபூர்த்தி சாந்தி செய்வதென்பது ஹிந்துக்களாகிய நமக்குள் வெகு காலமாக இருந்துவரும் வழக்கமாகும். அறுபதாண்டு வாழ்ந்திருந்து சாந்தி செய்துகொள்வதென்பது எல்லோருக்கும் இயலுவதில்லை. பூர்வ ஜன்மத்தில் செய்த நல்வினைப் பயனாக அது சிலருக்குத்தான் வாய்க்கிறது. இந்த நற்பெரும் சமயத்தைக் கைசோரவிடாமல், தமிழர்களாகிய நாம், வெறும் வாய்ப் பேச்சினால் மட்டும் தமிழராயில்லாமல், செயலிலும் சிறந்து நிற்பதற்குத் தகுந்த காலம் வாய்த்ததெனக் கொண்டு, திரு. வி. க. அவர்களைத் தக்கபடி கௌரவிக்கவேண்டும்.

தமிழ்க் கலை வளர்ச்சிக்குப் பாடுபடும் ஒரு பெரியாரை நாம் பெருமைப்படுத்த வேண்டும். தனக்கென வாழாத் தமிழ்க்குரியாளர் கலியாணசுந்திரர். தமிழருக்குப் புது வழி காட்டி எல்லாத் துறைகளிலும் பண்புறப் பணி செய்த ஒப்புரவாளராகிய திரு. வி. க. வின் சஷ்டி அப்தபூர்த்தியைக் கொண்டாடுவது தமிழ் நாட்டுக்கே பெரிய கௌரவம் செய்ததாகும்.

தமிழர்களாகிய நாம், தமிழபிமானிகளாகிய நாம், கவியுள்ளம் படைத்த நிகரற்ற செந்தமிழ் நாவலராகிய திரு. வி. க. வின் அறுபதாண்டு நிறைவு விழாவை உயர்ந்த முறையில் கொண்டாடி, நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

எம்மதமும் சம்மதமாய் ஒழுகும் சன்மார்க்க மணி திரு. வி. க. அவர்களுக்கு நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும், இன்னும் மேலும் மேலும் தமிழ்த்தொண்டாற்றத் தளரா ஊக்கத்தையும் கொடுக்குமாறு, தமிழ்க் கடவுளாகிய செந்தில் மேவிய கந்தநாதனைச் சிந்தைசெய்வோம்!

திருமண அழகன் திருநாள்

(அனந்தபுரம், த. முத்துரத்தினம், கரந்தைப் புலவர் கல்லூரி)

அகவற்பா

1

மணவழ கப்பெயர் மாண்புடைத் தமிழன்
தணவா அன்பினன் தண்டமிழ் வாணன்
புதுவது புனைந்து புத்துரை யியற்றி
மாசில் "தேச பக்தன்" இதழின்
ஆசிரிய ஞகை அருந்தொண் டாற்றி

2

"நவசக்தி" இதழை நாட்டில் தோற்றி
"முருகன் அல்லது அழகெனு" நாலுடன்
"மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும்"
கண்ணின் மணியெனும் "பெண்ணின் பெருமையும்"
அமிழ்தினு மினிய "தமிழ்த்தென் றலையும்"
இன்னும் பற்பல நன்னூல் இயற்றி

3

எங்குஞ் சென்று எழுச்சியை யூட்டி
சுவைநலந் தோய நலம்பல செறிய
அணிவகை நிறைய அழகிய நடையில்
சொற்பொழி வாற்றிச் சோர்வை யகற்றி
உறக்கம் போக்கி உணர்ச்சியை யூட்டி

4

அடிமை யுணர்ச்சியை அடியோ டாழ்த்தி
பட்டம், பொன், பொருள், பதவி வெறுத்து
மக்கள் தொண்டே மாண்பெனக் கொண்டு
செந்தமிழ்ப் பணியைச் சிரமேற் ருங்கி

மூச்சினும் பேச்சினும் முத்தமிழ் மிளிர
முப்பது யாண்டாய் முனியா துழைத்துப்
பெரும்புகழ் குவித்த பெற்றிமை யுடையோன்.

5

இயற்கையோ டியைந்த இன்ப வாழ்க்கையை
நாட்டில் நாட்ட நலமுற வுழைப்போன்.
இக்கினு மினிய இவனுரை தன்னில்
சமரசத் துடனே சமதர்மம் வரும்;
சேக்கிழார் வருவார்; சீர்திருத்தம் வரும்;
சங்கப் புலவர் அங்கம் பெறுவர்;
காதல் உரை வரும்; கம்பன் வருவான்;

6

அன்பன் இவனே அறுபதி யாண்டு
அகவை நண்ணினன் அகமது மகிழ
அன்னன் பிறந்த நன்னா ளதனில்
எங்குந் தமிழர் இனிதுறக் கூடி
'நலமெலாம் பெருக!' 'பலநாள் வாழ்க!'
என்றே அவனை ஏத்தியும் வாழ்த்தியும்
திருமண வழகன் திருநாள் செய்வோம்!

கல்பா மருந்துகள் வியாதிகளைத் தீர்க்கத் தவரு!
யௌவனத்தைத் தரக்கூடியது, உத்தரவாத சிகிச்சை
மதுமேகம், எலும்புருக்கி க்ஷயம், காசம், குன்மம், வாதங்கள்
ஸ்திரீ கர்ப்பக்கோளாறுகள், இதர நாள்பட்ட வியாதிகட்கும்
தபால் மூலமாவது, நேரிலாவது கண்டு ஆலோசியுங்கள்.
கல்பா பண்டிட் இ. ஸ்ரீநிவாஸாச்சாரி,
நாகேஸ்வரராவ் ரோடு, தியாகராய நகர், மதராஸ்.

கோவை வள்ளல்

(ஸ்ரீ டி. கே. கோவிந்தய்யர்)

ஒரு தரம் பார்த்தால் மறக்க முடியாது. எத்தனை தடவை பார்த்தாலும் இன்னும் பார்க்க வேண்டும் எனத் தோன்றும். எவ்வளவு அளவளாவினாலும், பசித்தவனுக்குப் பஞ்சாமிருதம் போல் இனிக்கும். கேட்கக் கேட்கத் தெவிட்டாது சொல்லுக்குச் சொல் புதிய கருத்துக்கள் காணும். அத்தகைய இனிய நண்பர் திரு. வி. கலியாணசுந்தரனார். மற்றொருவர் கோவை வள்ளல் வைஸ்ய பூஷணம் ப அ. ராஜு சிரேஷ்டியாராவார்.

கோவையிலே பிரபல ஸ்வர்ண மாளிகையின் சொந்தக்காரராகிய ஸ்ரீமான் ப. அ. ராஜு செட்டியார் அவர்கள் பூர்வ புண்ணிய விசேஷத்தினாலும் தமது அரிய குணாதிசயங்களினாலும், கொடைத் திறத்தினாலும், பெறுவதற்கரிய "சிரேயோ" சம்பத்தை அடைந்திருக்கிறார்.

ஸ்ரீமான் ராஜு சிரேஷ்டியார் அவர்கள் எதையும் ஆழ்ந்தறிந்து உண்மையை ஊடுருவிப் பார்க்கும் ஆராய்ச்சியாளர், பழமையின் நலத்தையும், புதுமையின் விரிந்த பயனையும் கொண்ட சீர்திருத்தக்காரர். உள்ளொன்று புறமொன்றில்லாத உண்மையாளர், தன் சொந்தக் காரியமென்றும், பொதுக் காரியமென்றும் பிரிவினையோ, பாரபக்ஷமோ இல்லாதவர். எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர் 'தேஹி' என்றோர்க்கு 'நாஸ்தி' என்று ஒரு போதும் கூறுதவர். அவர் தங்க நகைகள், வியாபாரத்தில் லக்ஷ லக்ஷமாகச் சம்பாதித்திருக்கிறார் சம்பாதித்துக் கொண்டுமிருக்கிறார். இரண்டு தெருக்களை இணைத்து அரண்மனையைப் போல வீட்டைக் கட்டி இருக்கிறார். எவ்வளவோ மில்களிலும், பாங்குகளிலும், டைரெக்டராகவும், பங்குதாரராகவும் இருக்கிறார். எல்லா போக பாக்கியங்களும் அடைந்திருக்கிறார். தானுண்டு, தன் வியாபாரமுண்டு. சுகபோகங்களுண்டு என்று இருந்துவிடாமல், ஒரு பக்கம் வந்துகொண்டிருக்கும் பணத்தை மறுபக்கம் செலவு செய்து கொண்டே இருக்கிறார். சமூகத்தாரில் யோக்யெமும் தகுதியும் பெற்றவர்களுக்கு பிறர் அறியாவண்ணம் தாராளமாக உதவி ஊக்கமளிக்கிறார். சமுதாயத்தாரிடமிருந்த சில்லரைத் துவேஷங்கள் அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை சாமர்த்தியமாகத் தீர்த்து வைத்து, நகை ஏலங்களின் போது ஏற்படும் போட்டிகளைத் தடுத்து அதன் மூலமாக வரும் ஆதாயத்தையும் சேர்த்து அம்மனுக்கு, நகைகள், ரத்ன மாலைகள், வெள்ளி வாகனங்கள் செய்வித்தார். கல்விக்

காக தாராளமாக பொருள் உதவுகிறார். வாசவீமஹால் கட்டிடம் ஏற்படுவதற்கே மூல புருஷராக இருந்து அதற்காக பெருந்தொகை உதவினார். தேவஸ்தானத்துக்கு பக்கத்து வீட்டை கோவிலுக்கே சேரும்படி செய்தார். ஸ்ரீவாசவி சுகர் கேண்டி ஒர்க்ஸ் பிரசிடெண்டாக இருந்து கல்வி நிதிக்காக ரூ. 3000 எல்லா பங்குதாரர்களின் சம்மதத்தின்பேரில் ஏற்படுத்தி வைத்தார். ஸ்ரீவாசவி ஜயந்தியை நிரந்தரமாக வருஷந்தோறும் கொண்டாடுவதற்காக நிதியை ஏற்படுத்தினார். எண்ணிக்கையற்ற ஏழை மாணவர்களுக்கு, உபகாரச் சம்பளங்கள் முதலியன ஒரு கையால் கொடுப்பது மறு கைக்கு தெரியாமல் பலவகைப்பட்ட உதவிகளைச் செய்து கொண்டே இருக்கிறார். இன்னமும் எவ்வளவோ காரியங்களைச் செய்யவேண்டுமென்றும் முற்காலத்திய குரு குலங்கள் போல குரு குலத்தை ஏற்படுத்தவும், தொழிற் கல்வி திட்டங்களையும் வகுத்து வைத்துக் கொண்டிருக்கிறார். இன்னமும் இவைபோன்ற எவ்வளவோ காரியங்கள்.

நாம் சர்வ சாதாரணமாக சம்பத்து, என்று சொல்லுகிறோம் அது "பிரேயஸ்" என்றும், "சிரேயஸ்" என்றும் இரு வகைப்படும். என்று சாஸ்திரங்களில் காணப்படுகிறது. தன, தான்ய, வாகன, கிருஹ, தாரா, புத்ர, போக, பாக்கியங்கள் யாவும் எவ்வளவு மேம்பட்டவையாயினும் அழியும் தன்மை வாய்ந்தன. ஆதலால அவைகள் "பிரேயஸ்" என்றும், சத்யம், தர்மங்களுடன், கூடிய தைர்ய, வீர்ய தியாகாதி குணங்கள், கட்வுட்தன்மை வாய்ந்த அழியாதனவாகையால் "சிரேயஸ்" என்றும் சொல்லப்படுகிறது "பிரேயோ" சம்பத்தை பலர் அடையலாம். ஆனல் 'சிரேயோ' சம்பத்தென்பது எளிதில் கிடைக்கத்தக்கதல்ல. மிகவும் துர்லபம். பூர்வ புண்ணிய அதிர்ஷ்ட விசேஷங்களால் லக்ஷத்தில் ஒருவருக்கு லபித்தால் உண்டு. அப்பேர்ப்பட்டவர்களுக்கு அகங்கார மமகாரங்களென்பது லவலேசமும் கிடையாது தன் சொந்தக் காரியமென்பது தனியாக இல்லை. செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதே அவர்களின் வேலை. அவர்களைத்தான் பெரியோர் என்றும் உலகம் சொல்லுகிறது. ஸ்ரீமான் ராஜு செட்டியார் அவர்கள் இந்த "சிரேயோ" சம்பத்தை அடைந்திருக்கிறார்.

கோவை வள்ளல் வைஸ்யபூஷணம் ஸ்ரீமான் ராஜு செட்டியார் அவர்களுக்கு ஆயுளபிவிருத்தியையும், ஐசுவர்யாபி சம்பத்தையும், தமிழ்த் தொண்டாற்றத் தளரா ஊக்கத்தையும் கொடுக்குமாறு செந்தில்மேவிய கந்தநாதனைப் பிரார்த்திக்கின்றனம்.

கோவை வள்ளல் நீடூழி வாழ்க!

சிறுகதை

தோணித்துறை

திரு. ரா. ஸ்ரீ தேசிகன், எம். ஏ.

காட்டுப்புத்தூரில் இரவு சுமார் பத்து மணிக்கு ஆரம்பித்த ஒரு பிரபலமான கலியாணத்தின் ஊர்வலம் விடியற்காலம் நாலு மணிக்கு முடிவடைந்தது. காவேரிக்கு அக்கரையிலுள்ள கட்டளை ஸ்டேஷனுக்கு நான் ஒன்பது மணிக்குள் போனால் போதும். ஆனால் நாலு மணிக்கே கலியாணக்காரர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டேன்.

அந்நேரத்தில் புறப்படுவதற்கு அனேக காரணங்கள் உண்டு. ஒரு கடல்போல் விரிந்து கிடக்கிற காவேரியின் வனப்பை விடியற்கால நேரத்தில் காண வேண்டுமென்ற ஆசையை வெகு நாளாய் உள்ளத்தே வளர்த்தேன். ஆற்றைக் கடப்பதற்குக் குறைந்த பட்சம் ஒரு மணி ஆகிவிடும். சீப்பளாப்புத்தூருக்கும் காட்டுப்புத்தூருக்கும் சுமார் இரண்டு மைல் தூரமிருக்கும் வண்டியில் போக எனக்கு விருப்பமில்லை. கால் நடையாய் நடந்து காலை அழகையும், அமைதியையும் வாரி விழுங்க உத்தேசித்து விட்டேன்.

சீப்பளாப்புத்தூரில்தான் தோணி ஏறவேண்டும். போகிற வழியில் இரண்டு பக்கங்களிலும் செறிந்த வாழைத் தோட்டங்கள் இருண்டு கிடந்தன. நடுவிலே நிலவில் மின்னுகிற வழி, ஆகாயத்தில் குறுக்கே ஓடுகிற சாயாபதம் போலக் காணப்பட்டது.

சீப்பளாப்புத்தூருக்கு மெல்ல ஊர்ந்து சென்றேன். இன்னும் முழுவதும் விடியவில்லை. பொழுது தேயத் தேய, அங்கங்கே சிதறிக்கிடக்கிற நட்சத்திரங்களின் ஒளி சுருங்க ஆரம்பித்தது.

நிலவும், விரிகின்ற காலை ஒளியில் கொஞ்சம் கொஞ்சமாய்க் கரந்தது. பக்கத்திலுள்ள பொழில்களில் பறவைகளும் தூக்கத்திலிருந்து கண்விழித்து இனிமையாய்க் கூவின. கம்பீரமாய்ச் சுழித்தோடுகிற காவேரியின் சப்தமும் காதில் விழுந்தது. மங்கிக் கிடந்த மரம், செடி, கொடி முதலான இயற்கைத் தோற்றங்களெல்லாம் ஒரு சைத்திரிகன் கையில் விபக்த உருவமடையும் ஒரு சித்திரம் போல என் முன் நன்றாய் எழுந்துவிட்டன.

சற்றுத் தள்ளியுள்ள கழனிகளில் உழுகிற உழவர்களின் உரத்த குரல்களிலும், மாடுகளின் இன்னிசை மணி ஓசைகளிலும், 'சல சல' வென ஓடு

கிற ஓடைகளின் அரவங்களிலும், பாறைகளின்மீது ஆறு மோதுவதினால் 'களுக் களுக்' என்றெழும் ஒலிகளிலும், மூங்கிற் காடுகளில் அடிக்கும் காற்றின் 'மர்மரா' சப்தங்களிலும், நாணற்படுகைகளை அலம்புகிற நீரின் நாதங்களிலும், என் சிந்தையில் 'பொம்' என்று ஒலி செய்த கலியாணச் சந்தடிகளும் சங்கீதங்களும் கரைந்து விட்டன. காலைத் தோற்றங்களிலும் காலை ஒலிகளிலும் என் மனம் ஈடுபட்டது.

தோணிக்காரன் துடுப்பின் கானத்திற்கிசைய தோணியும் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு நகர்ந்தது. காற்றுச் சுகமாய் வீசி என்மீது நீரின் குறுந் திவலைகளைத் தெளித்தது. காலை எழிலில் பெரிய ஆற்றைக் கடக்கிற பயங்கூட மறைந்துவிட்டது.

தோணி அக்கரை சேர்ந்ததும், அவரவர்கள் தங்கள் தங்கள் திசைகளை நோக்கிச் சென்றனர். தோணிக்காரன் மறுபடியும் ஜனங்களைச் சேர்த்துக் கொண்டு திரும்பி விட்டான். தோணிகள், வருவதும் போவதுமாயுள்ள ஓய்வில்லாத யாத்திரைகளைச் செய்தன.

எனக்கு வண்டி வர இன்னும் இரண்டு மணி நேரம் அவகாசமிருந்தது. காவேரிக் கரைக்குப் பக்கத்திலுள்ள ஹோட்டலில் காபி சாப்பிட்டுவிட்டு மறுபடியும் காவேரியை நோக்கிய வண்ணமே உட்கார்ந்திருந்தேன்.

அக்கரைக்கும் இக்கரைக்கும் போய்க்கொண்டிருக்கிற ஜனங்களைப் பார்க்கும்பொழுது என் ஞாபகமடை திறந்தது; 'பல காட்சி' வெள்ளம் பொங்கி வந்தது.

கரையேற்றுகிற ஓடக்காரனை யார் நினைக்கிறார்கள்? ஓடம் ஏறியவர்கள் அக்கரை சேர்ந்து அனேக ஊர்களில் சுகமாய்த் திரிகிறார்கள். "ஒரு கணப் பொழுதாவது ஓடக்காரன் நினைவு அவர்களுக்கு வருகிறதா?" என்ற எண்ணம் என் மனத்தகத்தே எழுந்தபொழுது, மற்றொரு காட்சி என் முன் விரிந்தது.

ஒரு கலியாணக் கூடம். அங்கு நீண்ட வரிசையான சமாராதனை. விளக்குகள் தொங்கின. பந்திபந்தியாய்ப் போஜனம் செய்துவிட்டு விருந்தாளிகள் அகன்றனர். சமையற்காரர்கள் மட்டும் ஓடக்காரனைப் போல அங்குமிங்கும் அலைந்துகொண்டே சதா பரிமாறிக் கொண்டிருந்தனர். போஜனம் செய்தவர்களுக்கும் சமையற்காரர்களின் நினைவு ஏன் வர வேண்டும்? விருந்தாளிகள் வருகிறார்கள்; போகிறார்கள்; அலைகள்போல் ஆடுகிறார்கள் சமையற்காரர்கள்.

இந்த விருந்தை நினைக்கும் பொழுது, செவிக்கும் சிந்தைக்கும் விருந்தளிக்கிற ஒரு புத்தக

மண்டபத்திற்கு என் மனம் திரிந்தது. அறிவுத் தாகத்தைத் தணிப்பதற்கும், ஆத்மாவுக்கு விருந்தளிப்பதற்கும், அனேக கிளார்க்குகள் அங்கும் இங்கும் அலேந்தனர்.

அந்த மண்டபத்திற்குச் சென்றவர்களில் சிலர் பௌதிக சாஸ்திர மர்மங்களைத் துருவி ஆராய்ந்தனர். சிலர் காவிய நாடுகளில் உலாவினர். மற்றுஞ் சிலர் ஆராய்ச்சிக் காட்டகத்தே திரிந்தனர். வேறு சிலர் ஆத்ம விசாரக் கடலில் ஞான நல்முத்தெடுக்க மூழ்கினர். ஒவ்வொருவரும் ஒரு கற்பனை—உலகத்தில் பொழுது போக்கினர். ஆனால் கிளார்க்குகளோ பிறருக்கு இன்பவழி காட்டி, அவர்கள் பணிவிடைகளில் பொழுதைக் கழித்தனர்.

இவ்வளவு பேர்களுக்கும் முதல் முதல் அறிவுச் சுடரைக் கொளுத்திய உபாத்தியாயர்கள் எங்கே? உபாத்தியாயர்களிடத்தில் படித்த பிள்ளைகள் வாழ்விலே பெரிய பெரிய ஸ்தானங்களைப்பெற்று மாளிகைகளிலும், அரண்மனைகளிலும் திரிகிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் எளிய குடிசைகளில் யாவருக்குந் தெரியாமல் இருந்துகொண்டு இன்னம் அநேக மாணவர்களை முன்னுக்கு கொண்டு வருகிறார்கள். இவர்களுடைய இடம் இவ்வெளிய குடிசைதான். ஓடக்காரன் நிலேதான் இவர்களுடைய நிலேயும்.

உபாத்தியாயர்களை நினைக்குந்தோறும் அனேக அறிவற்ற ஜனங்களைத் தங்கள் ஆத்ம சக்தியினால் அக்கரை சேர்க்கும் பரமாசாரியர்களுடைய உருவங்களும், அவர்கள் தள்ளும் தோணிகளும் என் முன் தோன்றின.

மண்ணேயும் விண்ணேயும் அளக்கிற பனிதோய்ந்த பல சிகரங்களேயுடைய இமயமலே போலத் தம் அறிவைக் காட்டுகிற ஒரு பெரியவர் எனக்குக் காட்சியளித்தார். பக்திவெள்ளத்தில் சதா ஆடிக் கருணே பொழியும் பெரிய கண்களினால் என்னைப் பேதைமை செய்தனர். ஒரு பக்தர் தனக்கென்று வாழாத ஒரு மஹானுடைய அன்புருவம் என் சிந்தையைச் சிறை செய்தது. உலகத் துயரங்களேயும், பாவங்களேயும் தன் முகத்தில் தேக்கிச் சோக வடிவமாய் நின்ற பெரியவர் உருவமும் என் முன் மிதந்து வராமலில்லே

அநேக தோணிகள் மிதந்தன. ஒன்றில் 'ஓம்' என்ற அட்சரம் வரையப்பட்டிருந்தது. மற்றொன்றில் ஒரு சிலுவை பதிக்கப்பட்டிருந்தது. பிறைச் சந்திரன் ஒன்றில் பிரகாசித்தது: ஒவ்வொரு தோணியில் உள்ளவர்களும் "பிறர் தோணிகள் கவிழ்ந்து விடும்; எங்கள் தோணி அக்கரை சேரும்" என்று கருதினர். ஆனால் எல்லாம் அக்கரை சேர்ந்த வியப்பில் எல்லோரும் மௌனத்தில் ஆழ்ந்தனர்.

சிலர் தனியாகவே நீந்தினார்கள். உண்மையில், அவர்கள் நீந்த வில்லே! ஏதோ மறைவாய்

ஒரு தனிசக்தி தள்ளிக்கொண்டு போயிற்று. மற்றுஞ் சிலர் கரையிலே நின்றுகொண்டு ஒரு பெண்மணியின் பாட்டிற் கிணங்க ஓலமிட்டனர் :

"என்புருகி இனவேல்
நெடுங்கண்கள் இமை
பொருந்தா பல நாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்த
னென்பதோர் தோணி
பெருது உழல்கின்றேன்."

கணக்கில்லாத உருவங்கள் அக்கரை சேராது யுகாந்தமாய் விரஜா நதிக் கரையில் காத்துக் கொண்டிருந்தன விரஜா நதியை எண்ணும் பொழுது கிரேக்கர் கதைகளில் காணும் கேரான் உருவம் 'மின்னலடி'த் தது. அவனும் இறந்தவர்களை 'ஸ்டிக்ஸ்' (Styx) நதியைக் கடக்கச் செய்தான். தாங்கள் சிறையிலிருந்து கொண்டு பிறர் சிறையை விடுவித்த மஹான்களை என்னை அறியாமல் என் கைகள் தொழுதன.

என்னைப்பற்றிய நினைவும் வர ஆரம்பித்தது. இறங்குகிற துறை தெரியவில்லை; ஏறுகிற துறை தெரியவில்லை. எத்தனை நாள் துறைமுகத்திற்குத் துறைமுகம் அலைக்கப் படுவேனோ?— என்ற எண்ணம் வருகிற தறுவாயில் ரயில் மணி அடித்தது.

என் சிந்தையும் கலங்கது. என் முன் விரிந்து கிடந்த காவேரியின்மீது தோணிக்காரன் அக்கரைக்கும் இக்கரைக்கும் போய்க்கொண்டிருந்தான்.

ஜோதி நிலைய : : வெளியீடுகள்

1. உஷா (சரத்சந்திரர்)	ரூ.	1	4
2. தெய்வ ஜனனம் (க. நா. சுப்ரமண்யம்)		1	4
3. சீதா (துவிஜேந்திரலால்ராய்)		1	4
4. மும்மணிகள் (சரத்சந்திரர்)		1	0
5. அனுராதா-ஹரிலக்ஷ்மி (சரத்சந்திரர்)		1	0
6. ஸந்தியா (சரத்சந்திரர்)		1	4
7. ஹேமாங்கினி (சரத்சந்திரர்)		0	12

அடுத்த வெளியீடுகள் :

அயர்லாந்து (எஸ். எஸ். மாரிசாமி உதவி ஆசி. தினமணி)	1	8
காணுமலே காதல் (கு. ப. ராஜகோபாலன்)	1	8

பிரதி மாதமும் பிரபல எழுத்தாளர்கள் எழுதிய உயர்ந்த நூல்கள் வெளி வருகின்றன.

விவரங்களுக்கு :

ஜோதி நிலையம்,
74, பெல்ஸ்ரோடு,
திருவல்லிக்கேணி – சென்னை.

அரக்கர்கோன் அருந்தவம்

திருவாளர் R. P. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

தேவர்க்குத் துணைவனான திருமாலோடு அமர் புரிந்து, இலங்கை அரசும் செல்வமும் இழந்து, பாதலம் புகுந்து பதுங்கி வாழ்ந்த அரக்கர் குலம் தழைத்தோங்க தசக்ரீவன் தோன்றினான். அரக்கர் குலக்கொழுந்தாய் விளங்கிய இவ்வறிஞன், தனது குலப் பெருமை குன்றியிருக்கக் கண்டு மனம் குழைந்தான். ஆண்மை நிறைந்த அரக்கர் மானமழிந்து ஏறுபோல் இறுமாந்து செல்லும் நடையிழந்து அடங்கியிருப்பதையும், அமரருள் ஒருவனான குபேரன் விமானமூர்ந்து இலங்கையை ஆள்வதையும் கண்டு தசக்ரீவன் மனம் கொதித்தான். ஐம்புலன்களையும் அடக்கி யாற்றும் தவ வலிமையாலேயே அரக்கரது பெருமை இவ்வுலகில் மீண்டும் இலங்கும் என்றறிந்த அண்ணல் ஓர் அழகிய கொன்றைவனம் குறுகிப் பல்லாயிரம் ஆண்டு பெருந்தவமியற்றினான். அரக்கர் காளை இயற்றிய அருந்தவத்தின் பெருமையை அறிந்த அயன் அவன் முன்னே தோன்றி உயரிய வரங்களை உவந்தளித்தனன். இவ்வாறே தசக்கிரீவன் தம்பியாய கும்பகர்ணன் நீரில் மூழ்கியும், நெருப்பில் நின்றும், நெடுங்காலம் தவம் புரிந்து அரிய வரங்கள் பெற்றான். அருந்தவம் முயன்று பெரு வரம் பெற்ற பிள்ளைகளை ஆர்வமுறத் தழுவி, அரக்கர் அகம் களித்தார்கள். அரக்கர் குலம் தலையெடுத்த தென்னும் ஆர்ப்பொலி எங்கும் நிரம்பியது.

> "அலையடுத்த கடல்துயிலும்
> அச்சுதனுக் கமரழிந்த அரக்கரெல்லாம்
> தலையெடுக்கப் பிறந்தீர்கள்
> வருகஎன உயிர்பொருந்தத் தழுவிக்கொண்டார்"

என்று கவி கூறுமாறு அரக்கர் அகமகிழ்ந்தார்கள். வரத்திலும், வலிமையிலும் தலைசிறந்த தசக்ரீவனை எதிர்க்க அஞ்சிக் குபேரன் இலங்கையை விட்டு அளகாபுரி அடைந்தான். அப்போது இழந்த தனம் அடைந்தவர்போல் அரக்கர் மீண்டும் இலங்கையிற் குடி புகுந்தார்கள். தசக்ரீவன் தவப் பெருமையால் இலங்கைமா நகரில் மணிமாடமாளிகைகள் நிரூபித்து மயன் மகளாகிய மண்டோதரியை மணந்து மன்னர் மன்னனாய் விளங்கினான். இவ்வாறு இலங்கிய இலங்கையின் பெருமையைக் கண்ட ராமதூதன் அரக்கர்கோன் இயற்றிய அருந்தவத்தின் பெருமையை வியந்து புகழ்ந்தான்.

> "தெய்வத் தச்சனைப் புகழது மோசெங்கண் வாளரக்கன்
> மெய்வுத் தாற்றிய தவத்தையே வியத்துமோ விரிஞ்சன்

அய்யப் பாடிலா வாத்தையே மதித்தூமோ அறியாத்
தொய்யற் சிந்தையாம் யாவரை யாதென்று துதிப்பாம்''

என்று அநுமன் இலங்கேசனது பெருமையை இனிய மொழிக ளாற் புகழ்ந்தான்.

* * *

இத்தகைய தவப்பெருமை சான்ற தசக்கிரீவன் சிவனடியே சிந்திக்கும் செல்வனுய் விளங்கினுன். பிறவா யாக்கைப் பெரியோனை மன, மொழி, மெய்களால் வழிபடும் மாண்பு வாய்ந்த சைவ சமய சீலனுய் இலங்கைநாதனது திருமேனியில் இலங்கிய வெண்ணீற்றின் பெருமையை,

'' இராவணன் மேலது நீறு, எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு, பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு, தத்துவ மாவது நீறு
அராவணங் கும்திரு மேனி, ஆலவா யான்திரு நீறே''

என்று திருஞானசம்பந்தர் போற்றிப் புகழ்ந்தார். 'மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு' என்று எடுத்துத் திருநீற்றின் பெருமையை கூறப்போந்த திருஞானசம்பந்தப் பெருமானே இராவணன் மேனியில் இலங்கும் வெண்ணீறு என்று போற்றுவாராயின் இலங்கேசனது பெருமை இயம்பும் தன்மையதோ? முழு நீறு பூசிய முனிவர்போல இலங்கை வேந்தன் மெய்யில் திருநீறணிந்து, மாதொருபாகனை மனக்கோயிலில் வைத்து மகிழ்ந்தான். தேவருக்கும், மூவருக்கும் மேலாய முழு முதற் பொருளே செம்பொருள் என்று தெளிந்து அப்பொருளை அருமறையால் போற்றி வழிபடும் அறிவனுய் விளங்கினுன். பண்ணொன்ற இசைபாடும் அடியார்க்கு மண்ணும் விண்ணும் கொடுக்கும் மணிகண்டனது பெருமையைப் வீணையிலமைத்து விண்ணோரும் வியக்கப் பாடினுன். இம் மன்னனது மனையாளாய் அமைந்த மண்டோதரி கற்பின் கொழுந்தாய்க் கலைஞானமும் சிவஞானமும் பெற்று விளங்கினுள். இவ்வாறு மனமொத்த மனையாளொடு சைவ சமய சீலனுய இலங்கை வேந்தன் இல்லறம் நிகழ்த்தினுன்.

இவ் வேந்தனுக்கு இராவணன் என்னும் பெயர் இறைவனுலேயே அருளப்பெற்றதாகும். தன் விமானத்தைத் தடைசெய்த வெள்ளிமாமலையைப் பெயர்த்தெடுக்க எண்ணி அசைத்த இலங்கை மன்னனது ஆணவத்தைக் கெடுத்து ஆட்கொள்ளக் கருதிய சிவபெருமான், சேவடிக் கொழுந்தா லூன்றியபொழுது வீரனது தலையும், தோளும் மலையினுள்ளே அகப்பட்டு நெரிந்தன. அந்நிலையில் அஞ்சா நெஞ்சு படைத்த அரக்கர்கோன் அலறி அழுது அறியாது செய்த பிழை பொறுக்குமாறு பணிந்து பன்னரும் சாமகீதம் பரிவுடன் பாடலுற்றுன். இதனை,

"கனகமா வயிரமுத்து பாமணிக் கயிலை கண்டு
முனகனாய் அரக்கன் ஓடி எடுத்தலும் உமையா ளஞ்ச
அளகனாய் நின்ற ஈசன் ஊன்றலும் அலறி வீழ்ந்தான்
மனகனாய் ஊன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே"

என்று தேவாரத் திருமுறை கூறுகின்றது. அன்பன் அழுவதைக் கண்டு அருள் சுரந்த இறைவன் இலங்கை வேந்தனுக்கு இராவணன் என்ற நாமமும் அளித்து நெடிய வாழ்நாளும் கொடி வாளும் அருளினான். அழுதருள் பெற்றவன் என்னும் பொருளதாய இராவணன் என்னும் சொல்லின் செம்மையைக் கல்வியிற் பெரிய கம்பர் விளக்கும் திறம் அறிந்து மகிழ்வதற்குரியதாகும். கூற்றையும் ஆடல்கொண்ட கும்பகர்ணன் அமர்க்களத்தில் ஆவி துறந்தான் என்றறிந்த இலங்கை மன்னன் அளவிறந்த சோகத்தால் அழுது அரற்றினான். அவ்வாறு அழுத அன்றே இராவணன் தன் பெயர்ப் பொருளை விளக்கினான் என்று கவி நயமாகக் கூறிப் போந்தார். தன்னை விட்டகன்ற தம்பியை நினைந்து பலவாறாகப் பன்னி அழுது,

"அண்டத் தளவும் இளைய பகர்ந்தழைத்துப்
பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான்"

என்று கவி கூறும் மொழிகளில், இராவணன் என்னும் சொல்லின் பொருள் விளங்கக் காணலாம்.

இவ்வாறு இலங்கை வேந்தனுக்கு இராவணன் என்னும் திருப்பெயர் அளித்த இறைவன் பின்னும்,

"மூவகை யுலகு மாள மூன்றரைக் கோடி யாண்டும்
எவ்வகைப் படையும் வெல்லும் சந்திர வாளும் ஈந்தான்"

என்று கவி இறைவனளித்த வாக்கின் பெருமையைப் புகழ்ந்து போந்தார். இவ்வாளின் வலிமையிலேயே மூவுலகையும் வென்று முட்டின்றி முறைசெய்தல் இலங்கை வேந்தனுக்கு எளிதாயிற்று. காலதூதர் போன்ற காலகேயர் தலைகளை இவ்வாளின் வன்மையால் இராவணன் அறுத்தெறிந்த கால முதல் அவன் பெயரைக் கேட்ட அளவில் தான் மங்கையர் கருப்பமும் கலங்கியதென்று கவிநயமாகக் கூறிப்போந்தார்.

"குலங்களோடும் தம் குலமணி முடியொடும் குறைய
அலங்கல் வாள்கொடு காலகேயரைக் கொன்றதற் பின்
இலங்கை வேந்தன் என்றுரைத்தலும் இடியுண்ட அரவில்
சலங்குமால் இனும் தானவர் தேவியர் கருப்பம்"

என்னும் கவியால் இறைவன் அளித்த சந்திரவாளின் வலிமை ஒருவாறு அறியப்படும். இன்னும் கொலையிற் கொடிய கொற்றம் வாய்ந்த வேற்படையால் வெல்ல இயலாத கழுகின் வேந்தனை ஈசனருளிய வாளாலேயே இராவணன் வென்று கொன்றான்.

இத்தகைய சீலம்வாய்ந்த வேந்தன் சிவபிரானையன்றி மற்றொரு தலைவனையறியாத வாலியாருடன் உயிர் நண்பனைய் அமைந்தது இயல்பேயாகும். வலிமையிற் சிறந்த வீரர் இருவரும் வழிபாட்டிலும் ஒற்றுமையுடையராய் இருந்தமையால் உயரிய நண்பராயினர். இவ்வான்ேறார் இருவரும் தவப்பெருந் தலைவர்களால் பாமாலை புனையப் பெற்றவர். இலங்கை வேந்தன் அழுது இறைவன் அருள்பெற்ற உண்மையை சிவஞானப் பேறுபெற்ற திருஞானசம்பந்தரும், சொல்லின் செல்வராய திருநாவுக்கரசரும் ஒவ்வொரு பதிகத்திலும் பாராட்டுவாராயினர். இவ்வாறு தெய்வத் திருமுறையில் என்றும் அழியாது புகழ்ப்பெற்ற பெருமை இலங்கை வேந்தனைப் போன்ற இணையற்ற அன்பருக்கே உரியதாகும். இவ்வாறு இறைவன் இலங்கை வேந்தனுக் கருள்செய்த அருங்கருணைத் திறத்தை வியந்து பதிகந்தொறும் பாடிய பான்மையின் கருத்தினை,

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடருள் செய்தார்"

என்று சேக்கிழார் இனிதெடுத் துரைத்தார்.

ஆன்றோர் புகழ்மாலை பெற்றுயர்ந்த ஆயிர மறைவல்ல அரக்கர்கோன் இறுதியாக இராமனுடன் போர்புரியப் புறப்படுமுன்னம் இறைவனை வணங்கி வழிபட்டுச் செல்லும் முறை சிவநேயச் செல்வரது சிந்தையை உருக்குவதாகும். தன் அருமைத் திருமக்களான அதிகாயனையும், மேக நாதனையும் இழந்து, மூலபலமும் முறிந்து, ஆணிவேரிழந்த மரம்போல் அமைந்த அரக்கர்கோன், ஈசனுக்குரிய பூசனை முடித்து வேண்டியார்க்கு வேண்டிய பொருள் வழங்கிப் போர்க்கோலம் புனைந்தான் என்று கவி கூறும் சொற்கள் சோகம் நிறைந்தனவாம்.

"ஈசனை இமையா முக்கண் இறைவனை இருமைக்கேற்ற
பூசனை முறையிற் செய்து திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி மற்றும் வேட்டன வேட்டோர்க்கெல்லாம்
ஆசற நல்கி ஒல்காப் போர்த்தொழிற் கமைவதானான்"

இவ்வாறு தேரேறிப் போந்த மன்னன் போர்க்களத்தினின்றும் மீண்டு வந்தானல்லன். இராமனது இணையற்ற அம்பால் முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முறிந்த இலங்கை வேந்தன் இறைவன் இணையடி யடைந்து மாறிலா இன்பத்தில் மகிழ்ந்தான்.

ஔவையெனும் அருட்கொடியில் பூத்த

ஒரு கவிமலர்

ஸ்ரீமதி ஸி. கனகவல்லி

ஒரு காலத்தில் பிரபு சிகாமணி ஒருவர் இருந்தார். அவர் இலக்கண இலக்கியங்களில் நன்கு பயிற்சி பெற்றவர். அவருள்ளம் எப்பொழுதும் அழகுக் கலைகளையும் அறிவுக் கலைகளையும் தழுவி வளர்ந்து வந்தது. அவர் தன்னிடத்துள்ள பொருள்களை கவிஞர்க்கும், கலைஞர்க்கும் பெருமகிழ்ச்சியோடு கொடுத்துதவி வந்தார். ஆகவே அப்பிரபு சிகாமணி அக்காலத்துள்ள புலவர்கட்கு ஓர் ஊன்று கோலாயிருந்து வந்தாரென்பது தெற்றென விளங்குகிறது.

சில ஆண்டுகளாக அப்பிரபு நல்ல, செவிக்கின்பந்தருகிற பாடல்களைக் கேட்டு இன்புற வேண்டுமென்று விருப்பங்கொண்டிருந்தார். ஆனால் பாட்டுக்கள் புலவர்களுக்குப் பெரும் பொருள் கொடுத்து ஆக்கப்படுவதென்பது அவர் அறிந்ததே. அதற்காக அவர் ஒரு யோசனை செய்தார். அதாவது அவர் தன் ஆஸ்தான மண்டபத்தில் ஒரு பொற்கிழி தூக்கி, அதனை தன் உள்ளத்திற்கு இன்னமுதாகும் ஓர் அருங்கவி பாடும் புலவருக்கு பரிசளிப்பதாக நாடெங்கும் அறிவிக்கச் செய்தார்.

பிறகு பிரபு அப்பொற்கிழியை அழகுபெற அமைந்துள்ள இலக்குமியின் சிலை யொன்றின் கரத்திலே திகழ்வித்தார். இலக்குமிதேவி ஓர் உயிரோவியமாக சித்தரிக்கப் பெற்றிருந்தாள். பொய்கையில் புதிதாக மலர்ந்ததொரு செந்தாமரை மலரில் அத்தேவி அமைக்கப்பெற்றிருந்தாள். சிறிது தூரத்தே யிருந்து நோக்குவோர், மண்டபத்தின் ஒரு பகுதியில் பொய்கை குளிர்ந்த நீரோடு அலை யெறிந்துகொண்டிருப்பதாகவும், அந்நீர் பரப்பிலே ஓர் இனிய செந்தாமரை மலர்ந்திருப்பதாகவும், அம்மலரின் மீது இலக்குமிதேவி வீற்றிருந்து பொற்கிழியும் கையுமாக எதிர்நோக்கி நகைபுரிவதாகவும் கருதி மயங்குவாராயினர்.

பொன்னரசியின் கரத்தினின்றும் பொற்கிழியைப் பெற பேரவாபிடித்த புலவர்கள் பலரும் பிரபுவின் சபாமண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். பிரபு வந்த புலவர்களை உபசரித்து, அவர்கள் பாடும் பாடல்களைக் கேட்டனர். அப்பாடல்கள் அவருள்ளத்தை மகிழ்விப்பதாக இல்லை; வெறும் சொல்லடுக்குகளும், மோனைகளுமே நிறைந்திருந்தன. பிரபு, புலவர்கள் பாடிய பாட்டுக்களில் உண்மைப் பொருள்கள் ஒன்றேனும் காணப்படவில்லையே யென்று பெருமூச்செறிந்தார். எனவே வந்த புலவர்கள் அவரவர்கள் விதியை நினைத்தவராய் வீடு போய்ச்சேர்ந்தனர்.

இஃது இவ்வாறிருக்க ஒரு நாள் திடீரென்று ஆண்டிலும், அறிவிலும் ஒருங்கே பழுத்த கிழவி ஒருவள் சபையை நோக்கி வந்தாள். அவள் தான் நம் ஔவை பிராட்டி, தமிழ்ச் செல்வி, கலைத்தாய்.

ஔவையின் வருகையைக்கண்ட புலவர்களும் மற்றுமுள்ளோரும் "இக்கிழவி எவ்வாறு பொற்கிழி பெறுதல் கூடும்" என்று தம்முள் உரையாடினர். ஆனால் பிரபு உருவினைக்கண்டு இகழாது, விரைந்தோடிவந்து அம்மூதாட்டியை உபசரித்து "வந்த காரியம் என்ன?" என்று அன்போடு வினவினார்.

அப்பொழுது ஔவை பிராட்டி, பிரபுவின் கருத்தினை நன்குணர்ந்துகொண்டு, பொன்னரசியையும் பொற்கிழியையும் நோக்கி ஒரு வெண்பாவை இனிமையாகப் பாடினாள். அது வருமாறு:—

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்தொருவர்—பூத்த மலர்த்
தண்டாமரைத் திருவே தாதா கோடிக் கொருவர்
உண்டாயின் உண்டென்றறு."

ஔவையெனும் அருட்கொடியில் பூத்த இக்கவிமலரின் அழகும் ஒளியும், மணமும் பிரபுவின் உள்ளத்தையும், அங்குக் குழுமியிருந்த புலவர்களின் மனத்தையும் மகிழ்வித்தது. பிரபு மனமுவந்து அப்பொற்கிழியை ஔவையாருக்கே பரிசாக அளித்தார்.

இவ்வெண்பாவின் கருத்து நன்கு புலனாகலாம். நூற்றில் ஒருவரே அறிஞர் பேசும் சபைகளில் சொல்லுதற்குரியவர். அவ்வாறு சொல்பவருள் புலமைப் பெருக்கோடு பொருளை உய்த்துணர்வோர் ஆயிரத்தொருவரே. அப்புலவருள்ளும் பதினாயிரத்தொருவரே வார்த்தையின் நயம் தெரிந்த கவிப்புலவர்.

இவ்வண்ணம் சில அரிய உண்மைகளை வெளியிட்ட ஔவை, பிரபுவை விளித்துப் பேசாது 'பூத்தமலர்த் தண்டாமரைத் திருவே' என்று இலக்குமியை விளித்துப் பேசத் தொடங்கி முடிவாகத்தான் கண்டு கொண்ட உண்மையினை வெளியிடப் புகுந்து 'தாதா கோடிக்கொருவர்' என்று பிரபுவின் வள்ளன்மையை சிறப்பித்துக் கூறினாள். இவ்வாறு தான் வெளியிட்ட உண்மைக்கு பொன்னரசியை சாட்சி யாக்கி 'உண்டாயின் உண்டென்றறு' என்று பொற்கிழியை நோக்கிக் கூறி முடித்தாள். இப்பாட்டு ஔவை பிராட்டியின் அழகிய மனோதர்மத்தை அப்படியே இன்னோசைப் பெற்று வரும் செஞ்சொற்களால் சித்தரித்துக் காட்டுவதாகும். இதனால் நம் நாட்டுப் பெண்கள் கல்வியில் தேர்ச்சி பெற்று ஔவை பிராட்டியைப்போல் திகழ வேண்டுமென்பது நன்கு விளங்குகிறதல்லவா?

தமிழ் இலக்கியத்தின் பெருமை

(திரு. வி. க.)

ஒரு நாடு சிறந்து விளங்கவேண்டுமானுல் அதன் பாஷை செழிக்கவேண்டும். ஒரு நாட்டை அந்நாட்டின் மொழிதான் ஆள்கிறது.

தமிழ் இலக்கியத்தில் காதலும் வீரமும் பிரதான பாகம் வகிக்கின்றன. நாகரிகத்தின் சிகரம்தான் உண்மைக் காதல். காதல் இல்லையானுல் வீரமும் இல்லை. உண்மையான காதல் உலகமெங்கும் பரவவேண்டும் என்பதே தமிழரின் லக்ஷியம். இது உயிருக்கு உயிர்போன்றது. இது தமிழரின் உயர்ந்த நாகரிகத்தைக் காட்டுகிறது.

முற்காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் கடவுளிடம் காதல் கொண்டு கவிகள் இயற்றினுர்கள். கடவுளை நாயகனுகவும், தம்மை நாயகியாகவும் கருதிப் பாடினுர்கள்.

காதலை ஆயிரக்கணக்கான பாடல்களில் அமைத்துப் பாடவேண்டும் என்ற நோக்கத்துடனேயே கம்பரும் ராமாயணத்தைப் பாடினுர் என்று நான் கருதுகிறேன். சீதைதான் காதல்; ராமன்தான் வீரம்.

ராமாயணத்தைக் கொளுத்தவேண்டும் என்று சிலர் சொல்கின்றனர். இது பெரும் தவறு. ராமாயணம் ஒரு சிறந்த அரசியல் நூலாகவும் காட்சி அளிக்கிறது. ராமாயணம் அறிவுப் புரட்சியின் சின்னம்.

பரீக்ஷைக்காக ஏற்பட்ட நூல்களைத் தவிர இதர நூல்களையும் மாணவர்கள் படிக்கவேண்டும். நாடு முன்னேற்றமடைவதற்கு இதுபோன்ற படிப்புகள் ஏராளமாகப் படிக்க வேண்டும்.

தமிழ் வித்வான்கள் உபாத்தியாயர் வேலைக்குத்தான் போகவேண்டும் என்பதில்லை. வித்வான்களெல்லாம் பத்திரிகாசிரியர்களாக வேண்டும். பத்திரிகைகள்தான் நாட்டின் உயிர். அவற்றில் தமிழ் வித்வான்கள் ஆசிரியர்களாக இருந்தால்தான் தமிழ் நாடு உயிர்த்து எழும். ஆங்கிலப் பதங்களுக்கு ஏற்ற தமிழ்ப் பதங்கள் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இது தவறு. தமிழை நன்ருய்க் கற்ருல் இந்த அபிப்பிராயம் மாறிவிடும்.

வனிதையர் வனப்பை
வளர்ப்பது ஆபரணங்கள்

நங்கையர் விரும்பும் நாகரீக நகைகள்
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்

P. A. R.

ஆபரணங்களே

வைர, தங்க, வெள்ளி



ஆபரணங்களுக்கு

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

கடைத்தெரு, கோயமுத்தூர்

போன் 218 A.   தந்தி "ராஜா"

தமிழர் தலைவர் :: ::

"கலைவாணன்"

1. கவ்விடும் அடிமைக் காரிருள் மாளக்
காந்தி என்னும் கனல்கொண்டு
ஒவ்வொரு மனிதர் உளத்திலும் ஆன்ம
ஒளியினை ஓங்கிடச் செய்தோன்
இவ்வுலகிலே ஓர் கோயில் நாமெல்லாம்
இறை யுருவே எனக்கண்டு
அவ்வழி காட்டி ஆளவே வந்த
அருள் உருவாகிய பெரியோன்.

2. உழைத்திடும் ஏழை உழைத்தபின் உண்ண
ஓர் பிடி சோறிலா தழவும்
உழைத்த அவ்வுழைப்பின் ஊதியம் பிறர்தம்
உடமை என்றுரிமை கொண்டாடிப்
பிழைப்பதைத் தஞ்சொற் பெருக்கினல் காட்டிப்
பின் செலுந்தமிழரை முன்னுக்(கு)
அழைத்தவர் பணிகள் ஆற்றியே ஆண்டு
அறுபதும் போக்கிய கிழவன்.

3. அழகுதான் எங்கள் அறுமுகத் தெய்வம்
அருந்தமிழ் நாட்டுளீர்! அதனல்
அழகொடு பழகி அழகனி புனைமின்!
அழகிசை நெஞ்சயாழ் மீட்ட
அழகிடை இறைவன் ஆலயம் காண்மின்!
அவன் அடி பரவுமின்! என்று
அழகுடன் என்றும் பழகிடுந் தமிழில்
அறிவுரை கூறிய அண்ணல்.

4. ஆங்கிலம் பழகும் அன்னியர் தமது
அன்னையின் நாட்டுளே வந்து
தேங்கிடும் புகழைத் தீய்த்திடக் காணத்
தீ யெனச் சீறி, அப்புன்மை
நீங்க தேசீய காங்கிரஸ் காட்டும்
நேர்வழிச் சென்று முன்னின்று
தாங்கி இங்கதனல் தாய்த் தமிழ் செய்த
தவப்பயனே உருவானேன்.

5. தமிழுடன் சைவத் தர்மமே லோங்கத்
தம் பெரு வாழ்வையே தந்தோன்
தமிழர் தம் பண்டைத் தாழ்வினைப் போக்கித்
தன்னுணர் வூட்டிய வீரன்

தமிழ்க்கலை உயரத் தாய்மொழி பரவத்
தானும் இத் தரணியில் வாழ
தமிழகம் பெற்ற தனிப்பெருந் தலைவன்
தான் கலியாண சுந்தரனார்.

6. புப்புது முறைகள் புலமையின் பெருமை
புந்தியைக் கவரும் ஓர் அருமை
செப்புதற் கினிமை செஞ்சொலைக் கேட்போர்
செவிகளுக் கோர் தனி ஆர்வம்
அப்பர் உள் ஆண்மை, வள்ளுவன் தூய்மை
அடிகளார் நேர்மை ஈதெல்லாம்
ஒப்பி இங்குற்றிவ் வற்புதத் தலைவன்
உரைநடை யான தோர் புதுமை.

7. எம்மதம் எனிலென்? எம்மற மெனிலன்!
எம்மனப் பான்மையர் எனிலென்!
தம்முயிர் தமிழே, தம் முடல் தமிழே
தம் மனத் தெண்ணமுந் தமிழே
தம் மொழித் தமிழே தானெனப் புகலுந்
தரணியில் உள்ளவர் எவரும்
எம்மவர் தமிழர் என்று வீண் பூசற்
கேது வில்லாமலே செய்தான்.

8. அருந்தமிழ் நாட்டுப் பெரும்பணிக் கென்றே
ஆண்டுகள் அறுபதும் வாழ்ந்த
பெருந்தமிழ்த் தியாகி பிறந்தநாள் தமிழர்
பீடுற வோங்கிய பெருநாள்
வருந்திய எந்தாய் வண்டமிழ்ச் செல்வி
வாழ்வினைக் கண்ட நாள் இன்று
பொருந்தும் இன்னாளைப் புண்ணிய நாளாய்ப்
போற்றும் இத்தமிழகம் நோற்று!

9. பாழ்படும் நிலையில் பாரிடை மங்கிப்
பரதவித்திட்ட தாய் நாட்டின்
கீழ் நிலை போக்கித் தாழ்வினின் றேற்றிக்
கிருதயுகங் காட்டிடற் கென்றே
வாழ்வுறும் இந்த வள்ளலின் ஆயுள்
வளர் பிறை மதியென வளர
ஊழ் வினை உள்ளம் உவந்தருள் செய்ய
உயர்தமிழ்த் தேசமே போற்று!

10. சங்கினை ஒலிமின்! சயமுற சறைமின்!
சாதுவர் வாழ்த் தொலி செய்மின்!
மங்கலப் பண்கள் பொங்கிடச் சொல்மின்!
மதுமலர் தூவுமின் எங்கும்!
இங்கு நம் நாட்டில் எங்கணும் நமது
இப் பெருங் கிழவரின ஆயுள்
பொங்கி நம் தமிழும் புவனமும் போலப்
பொலிவுறச் செய்மின்! இன்னுட்டீர்!

திரு. வி. க.

பிறப்பு	26-8-1883
தாயார்	சின்னம்மாள்
தந்தையார்	விருத்தாசல முதலியார்
மனைவியார்	கமலாம்பிகையம்மையார் (மறைவு 1918)
படித்த கல்லூரி	வெஸ்லிக் கல்லூரி
தமிழ் ஆசிரியர்	திரு. கதிரைவேற் பிள்ளை மயிலை, தணிகாசல முதலியார்
மணம்	1912
பணி	ஸ்பென்சர் கம்பெனி எழுத்தாளர் ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளி ஆசிரியர் வெஸ்லிக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் 'தேச பக்தன்' ஆசிரியர் 'நவசக்தி' ஆசிரியர்
ஈடுபட்ட இயக்கங்கள்	தமிழ் - சமயம் - சீர்திருத்தம் - அரசியல் - தொழிலாளர் இயக்கங்கள்.

தந்தி "யூகலிப்டஸ்" மதராஸ் ஸ்தாபிதம் 1904

மதராஸ்

டி. சி. நாகலிங்கப்பா & கம்பெனியார்

மங்கையர் மகிழ்ச்சிக்காகவே தயாரிக்கப்பெற்ற

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைப்போலவே
பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்தனவல்ல.
கருக்காது 2 வருஷத்திற்கு உத்திரவாதம்.
மிகவும் அழகாக இருக்கும்.



பெரிய சைஸ் 2" அகலமும் அதற்கு
மேற்பட்டதும் ஜதை ரூ. 4—8—0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள்
ஜதை ,, 3-12-0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$"க்குட்பட்ட ,, 3—0—0

ஆர்டர் செய்பவர்கள் கையில் அணிந்திருக்கும் வளையல்களின் உள் சுற்றளவு அல்லது குறுக்களவு அனுப்பவும்.

வி. பி. சிலவு ஜதை 1 முதல் 6 வரை அணு 10.
எமது கேட்லாக் இனும்.

மோதிரங்கள், செயின்கள், காசிகாமணி செயின்கள், பொத்தான்கள், ஒட்டியானங்கள், ஸ்வஸ்திக் வளையல்கள். புருச்சுகள், டாலர்கள், சின்தடிக்கல் செயின்கள், மாலைகள், வாட்ச் செயின்கள், லோலாக்குகள், அட்டிகைகள், காசு மாலைகள் முதலிய பலவிதமான ஆபரணங்கள், புதுமாதிரி களில் கிடைக்கும்.

டி. சி. நாகலிங்கப்பா & கம்பெனி,
280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 516, மதராஸ்.

திரு. வி. க. நூல்களிலிருந்து

:: மலர்மாலை ::

[எம். கே. ராமமூர்த்தி தொகுத்தது]

இவ்வுலகமே அழகுவடிவம். இவ்வழகிய உலகிடை நின்று அண்ணாந்து பார்த்தால், மேலும் கீழும் சுற்றும் முற்றும் அழகு சொரிவது காணலாம். அழகிய நீலப்படாத்தின் விரிவில் நித்திலங் தூவினாலென வானத்தில் ஊருஞ் செவ்விய அழகை என்னென்று வருணிப்பது? ஞாயிற்றின் ஒளியை என்னென்று நவில்வது? திங்கள் நிலவை என்னென்று செப்புவது? கோள்களின் மின்னலை என்னென்று கூறுவது? கரிய காட்டின் காட்சியை எப்படி எடுத்துக் காட்டுவது? கை நீட்டும் அலைகடலின் கவினை எங்ஙனம் கழறுவது? என்னே அண்டத்தின் அழகு! இவையெலாஞ் சேர்ந்த ஒன்றே இயற்கையன்னையின் அழகு வடிவம். அவ்வழகே அழியா அழகு. அதுவே முருகென்னும் பேரழகு.

⁂

பெண்ணுலகின் பெண்மையும் தாய்மையும், இறைமையுமே உலகை நடாத்தி வருகின்றன. அப்பெண்ணுலகின் நிலைகொண்டே ஒரு நாட்டின் நாகரீகத்தை அளந்துணரல் வேண்டும்.

⁂

பெண்ணடிமை ஒரு கொடுமை. உலகம் பெண்ணால் ஆக்கப்பட்டிருக்கிறது. அவ்வுலகில் ஒரு கூறாகிய பெண்மக்கள் மட்டும் தாழ்த்தப்பட்டதற்கு ஏதாயினும் பொருள் உண்டோ?

⁂

வேத காலத்தில் பெண்மக்கள் உரிமை பெற்றிருந்தார்கள். சங்க காலத்தில் அம்மக்கள் உரிமையின்பம் நுகர்ந்தார்கள். கம்பன் காலம் வரை பெண்ணுரிமைக்குப் பெருங் கேடு நிகழவில்லை.

பெண்மக்கட்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை உன்ன உன்ன உள்ளம் உருகுகிறது. அவைகளை விதித்தவர்களின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா? இரும்பென இயம்புவதா?

⁂

பெண்மக்களிடம் பெண்மை, தாய்மை இறைமை ஆகிய மூன்று இயல்புகளிருக்கின்றன. அவைகள் முறையே மலர்ந்து, காய்த்து, கனியும் முறையில் அவர்கள் வாழ்வு நடத்துவதற்கு ஆணுலகந் துணைபுரிதல் வேண்டும். இறைமை கனியாதவாறு பெண்ணுலகைக் கெடுத்தல் பாவம்.

⁂

காவியமும் ஓவியமும் ஒரு நோக்குடையனவே. கருத்தில் இரண்டும் இயற்கை அழகையே பதிக்கின்றன.

என் வாழ்க்கைக் குறிப்பு

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

"தோற்றமுண்டேல் மாணமுண்டு" என்பது வன்றெண்டர் வாய்மை. இந்நில வுலகில் எத்தனையோ உயிர்கள் பிறந்தன; எத்தனையோ உயிர்கள் இறந்தன. இவ்வேளையில் தோன்றும் உயிர்கள் எத்தனையோ? தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் இடைப்பட்டது வாழ்க்கை. வாழ்க்கை வரலாறு உடையது. ஒவ்வோர் உயிர்க்கும் வாழ்க்கை வரலாறு உண்டு. இதுகாறும் உலகங் கண்ட வாழ்க்கை வரலாறுகள் எவ்வளவு? அவை எண்ணில் அடங்குமோ? அவைகளைக் கணக்கிட்டுக் கூற வல்லார் உளரோ?

போது – சிறப்பு :

வாழ்க்கை வரலாறு இருவிதம். ஒன்று பொது; மற்றொன்று சிறப்பு. பொது எல்லா உயிர்கட்கும் உரியது; சிறப்பு மக்கட்கு மட்டும் உரியது எப்படி?

உயிர்களில் வேற்றுமை இல்லை. எல்லா உயிர்களும் ஒன்றே. பின்னை வேற்றுமை எங்கே எழுகிறது? உயிர்கள் தாக்கும் உடலை யொட்டியே வேற்றுமை எழுகிறது. உயிர்கள் ஒரேவித உடலைத் தாக்குவதில்லை. அவை பல திற உடல்களைத் தாங்குகின்றன. புல் பூடு செடி கொடி மரம் முதலிய உடல்களையும், புழு மீன் பாம்பு ஓணான் பல்லி முதலிய உடல்களையும், ஈ வண்டு பறவை முதலிய உடல்களையும், பன்றி ஆடு மாடு புலி யானை கரடி சிங்கம் முதலிய உடல்களையும், மக்கள் உடலையும் உயிர்கள் ஏற்கின்றன. இவ்வுடல்களின் உறுப்பு, கரணம் முதலியன ஒரு படித்தாய் அமைவதில்லை அவை பல படித்தாய் அமைகின்றன. அவ்வமைப்புக் கேற்றவாறு அறிவு விளங்குகிறது. உயிர்களின் அறிவுத் திறங்களை நன்கு தெளிந்த பண்டை மூதறிஞர், அவைகளை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என்று பாகுபாடு செய்தனர். ஓரறிவுயிர் முதல் ஐந்தறிவுயிர் வரை ஓரினம்; ஆறறிவுயிர் வேறோரினம். முன்னையது பகுத்தறிவில்லாதது; பின்னையது பகுத்தறிவுடையது. அஃது அஃறிணை; இஃது உயர்திணை. அஃறிணை உயிர்கள் படிப்படியே பல திற உடல்களை எடுத்து எடுத்து, இறுதியில் உயர்திணைக்குரிய உடலை எடுக்கும்.

மனிதப் பிறவி உயர்திணையின்பாற் பட்டது. அது விடுதலைக்கு உரியதாதலின், அதற்குமேற் பிறவி அமைவதில்லை இது

பற்றியே மக்கட் பிறவி விழுமியதென்று உலகம் ஒரு முகமாகக் கொண்டது.

மனிதப் பிறவி எடுத்தவரெல்லாம் மக்களாகார். அவருள்ளும் கல்லுண்டு; மரமுண்டு; பாம்புண்டு; பறவையுண்டு; விலங்குண்டு. அவர் மக்களாக முயலுதல் வேண்டும். முயற்சி ஒரே பிறவியில் வெற்றி அளிப்பினும் அளிக்கும்; வேறு சில பிறவிகளில் வெற்றி அளிப்பினும் அளிக்கும்.

உயிர் மக்களுலகுக்கே உண்டு என்றும், மற்ற உலகங்கட்கு இல்லை என்றும் கூறுவோருளர். இக்கூற்று இனி ஏற்றமுறாது. அக்காலம் மலை ஏறியது. அஃறிணை உலகுக்கும் உயிருண்டு என்று விஞ்ஞான உலகம் உறுதி செய்துவிட்டது.

உடல் ஒருவித விளக்கு. இதை 'மாயாதனு விளக்கு' என்றனர் ஆன்றோர். உயிர் அறியாமை இருளில் மூழ்கிக் கிடப்பது. படிப்படியே அதன் இருளைப் போக்கி அறிவை விளக்கம் செய்வது உடல். அதனால் உடல் "விளக்கு" என்று சொல்லப்பட்டது. உயிர், பலதிற உடல்களில் ஒன்ற ஒன்ற, அதனிடை அறிவு விளக்கம் பெருகிப் பெருகி வளர்கிறது அவ்வளர்ச்சிக்குத் துணை புரியும் பண்பு இயற்கையில் இருக்கிறது. இது நம் முன்னோரால் காணப்பட்டதே. இதன் உண்மையில் இக்கால அறிஞர்க்கு ஐயப்பாடு விளைத்து வந்தது. இனி அவ்வையப்பாட்டுக்கு இடம் இராது அறிஞர் ஹெக்கல், டார்வின் முதலியோர் விஞ்ஞான வழியில் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. அவைகள் இக்கால அறிஞரின் ஐயப்பாடுகளைக் களைவல்லன.

உடல் வாயிலாக உயிர் பெற்றுவரும் விளக்கம் (வளர்ச்சி) உள்ளதுசிறத்தல் என்பது. உள்ளதுசிறத்தலைக் கூர்தல் என்பர் தொல்காப்பியனார். கூர்தலறம் (Evolution) உலகை வளர்த்து வருகிறது. உலக வளர்ச்சிக்கென்று கூர்தலறம் இயற்கையில் அமைந்துள்ளது

கூர்தல் அறத்தை டார்லின் ஆராய்ச்சி கொண்டு முதல் முதல் எனக்கு அறிவுறுத்தியவர் தோழர் எம். சிங்காரவேல் செட்டியார். பின்னே அவ்வறத்தைப் பற்றிய உணர்வு, தியோசாபிகல் சங்கப் பேரறிஞர் சிலர் கூட்டுறவால் ஒருவழியில் பெருகியது. இயற்கையோடியைந்து வாழ வாழக் கூர்தல் நுட்பம் தானே விளங்கிச் செல்வதை அநுபவத்தில் நன்கு தெளிதல் கூடும்.

யான் இப்பொழுது மனிதப் பிறவி எய்தியுள்ளேன். முன்னே கீழ்ப்பட்ட பிறவிகள் பல எய்தி யிருப்பேன். பழம் பிறப்பை உணரும் வாய்ப்பு மனிதப் பிறவியில் அமைந்திருக்கிறது.

அவ்வுணர்வு விளங்குதற்குத் தக்க உழைப்பு வேண்டும். சத்திய ஞானப் பேற்றுக்கு அறிகுறி பழம் பிறப்புணர்தல் என்று புத்தர் பெருமான் அருளியுள்ளனர். புத்தர் பெருமான் அருள் மொழியில் எனக்கு உறுதியுண்டு சீலம் வாழ்க்கையானல் பழம் பிறப்புணர்பு எளிதில் விளங்கும். வெறும் ஆராய்ச்சி அவ்வுணர்வை உண்டுபண்ணுது. பழம் பிறப்புணர்பை உண்டுபண்ணவல்லது சீலம்; சீலம்.

புல்லிலிருந்து மக்கள் வரை உயிர்கள் அடையும் உடம்புகள் ஒரே விதமாயில்லை; மாறுபட்டனவா யிருக்கின்றன. ஒரு பிறவியிலேயே மாறுதல் நிகழ்வதையும் காண்கிறேம். அந்நிகழ்ச்சியை என்னென்று கூறுவது? இதை வாழ்க்கை வரலாறு (Life History) என்று உலகம் கூறுகிறது.

ஒரு தவளையை எடுத்துக்கொள்வோம். அதன் வளர்ச்சியில் எத்துணை மாறுதல்! சிங்கத்தின் உறுப்புக்கள் சில புலியின்கண் இல்லை; புலியின் உறுப்புக்கள் சில யானையில் இல்லை; யானையின் உறுப்புக்கள் சில ஒட்டகத்தினிடம் இல்லை. மக்கட் பிறவியிலும் மாறுதல் உற்றே வருகிறது. மிகப் பழம் பெருங் காலத்தில் மக்கள் ஆண் பெண் பிரிவின்றி ஒன்றியே இருந்தார்கள் அவர்கள் முக்கண்ணர்களாய், கோரைப் பல்லர்களாய், மாட்டுக் குடலர்களாய் வாழ்ந்த காலமுண்டு. மக்களின் உள்ளுறுப்புக்களிலும் அவ்வப்போது சிற்சில மாறுதல்கள் உற்றே வருகின்றன. இவ்வாறு உயிர்களின் உடலுறுப்புக்களில் நேரும் மாறுதல்கள் பொதுப்பட்ட வாழ்க்கை வரலாறு என்னப்படும். சிறப்பு வாழ்க்கை வரலாறு என்பது, மக்கள் வாழ்விலே அன்றாடம் உற்றுவரும் நிகழ்ச்சிகளின் சேர்க்கை; ஈட்டம். இதை வாழ்க்கைக் கீழ்க்கணக்கு - பேரேடு - என்னலாம். இது மக்கட் பிறவிகளில் நிகழாதது இப்பிறவிகள் பகுத்தறிவில்லாதன வாதலால், இவைகளின் அன்றாட வாழ்க்கை ஒரேவிதமாக நடைபெற்று வருகிறது. ஒரேவித வாழ்க்கையில் வரலாறு எப்படி அமையும்? இங்கே குறிக்கொண்டது மக்கள் வாழ்க்கையில் அன்றாடம் நிகழும் வரலாறே யாகும்.

ஒரு சிலர்:

வாழ்க்கை வரலாறு ஒவ்வொருவரிடத்திலும் அமைவது. அவ்வரலாறு அமையாதவரே இரார் என்று கூறலாம். ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதப் புகுந்தால் அந்நூல்கள் அடுக்க இவ்வுலகம் போதுமா? போதாது. அந்நிலையை இயற்கை என்றும் உண்டுபண்ணுது. வாழ்க்கை வரலாற்றை எழுதும் பேறு ஒரு சிலருக்கே வாய்க்குமாறு இயற்கை

செய்யும். பலதிறப்பட்ட உலகை ஒழுங்கு முறையில் நடாத்தும் பொறுப்பு இயற்கை அன்னையினுடையது.

வெற்றி தோல்வி :

வாழ்க்கையில் வெற்றியும் பேசப்படுகிறது; தோல்வியும் பேசப்படுகிறது. வெற்றி வாழ்க்கை எது? தோல்வி வாழ்க்கை எது? பதவி, பொருள் முதலியவற்றில் படிப்படியே இவர்ந்தோர் வாழ்க்கை வெற்றியுடையதென்றும், மற்றவர் வாழ்க்கை தோல்வியுடையதென்றும் பொதுவாகக் கருதப்படுகின்றன. வாழ்க்கையின் வெற்றி, பதவி பொருள் முதலியவற்றில் விளைவது உண்மையாயின், என்னுடைய வாழ்க்கை முழுத்தோல்வி யுடையதென்று தியங்காது சொல்வேன். வாழ்க்கையில் வெற்றி என்பதும், தோல்வி என்பதும் எனக்கு வேறு விதமாகத் தோன்றுகின்றன. மக்கட் பிறவியில் பகுத்தறிவிருத்தலும், அது படிப்படியே விளக்க முறும் பண்பு அதன்பாலிருத்தலும் நன்கு தெரிகின்றன. இவ் வளர்ச்சிக்கென்று வாழ்க்கை அமைகிறது. இத்தகைய வாழ்க்கையின் பேறு, பதவி பொருள் அளவில் நிற்பதாகுமா என்று ஐயுறுகிறேன். எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து, எவ்வுயிரும் பொதுவெனுந் தெளிவு தோன்றித் தம் உயிரே பிற உயிரும் என்னும் உணர்வு பொங்கித் தொண்டு செய்யும் அன்புச் செல்வமாகிய அந்தண்மை அமைகிறதோ, அவ் வாழ்க்கை வெற்றியுடையதென்றும், மற்றவர் வாழ்க்கை தோல்வியுடையதென்றும் எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அநுபவம் முதலியன எனக்கு உணர்த்துகின்றன. எனது வாழ்க்கையில் அந்தண்மை இடம் பெற்றதா? இல்லையா? இதற்குச் சோதனை வேண்டும். என் வாழ்க்கைக் குறிப்புக்கள் வெளிவரின் சோதனைக்கு வழி ஏற்படும்.

பண்டை மூதறிஞர் :

பண்டை மூதறிஞர் தத்தம் வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதும் முயற்சியில் தலைப்பட்டாரில்லை அவருள் நூலெழுதும் வாய்ப்புப் பெற்றோர் நூலில் எங்கேயோ ஒரு மூலையில் தமது வரலாற்றைக் குறிக்கும் அவசியம் நேர்ந்தால் குறிப்பர். தமது தமது வரலாற்றைத் தாமே எழுதப் புகுவதைச் சிறுமையாகவோ செருக்காகவோ பிற என்னவாகவோ முன்னோர் கருதி இருப்பர். அவர் தமது வரலாற்றைப் பெரிதாகக் கருதவில்லைபோலும் அக் கால தேவதைக்கும அஃது அவசியமாகத் தோன்றவில்லை போலும்.

முன்னோர் வரலாறுகள் பெரிதும் பின்னோரால் எழுதப்படுவது வழக்கம் அவைகளில் மெய்யுரையுமிருக்கும்; புனைந்துரையு

THANGABASPAM
TOBACCO
தங்கபஸ்பம்
புகையிலை
நா. ஆறுமுகம்பிள்ளை, காரைக்குடி.

மிருக்கும். புனைந்துரை நன்னோக்குடன் அன்பினின்றும் எழுந்த தென்றே தெரிகிறது. புனைந்துரையைச் சரித்திர உலகம் ஏலாது.

முன்னாளில் சாம்ராஜ்ய அமைப்பு, அரசியல் கட்சி, ஆவேசத் தேர்தல், வெறிப் பேச்சு, பத்திரிகை முதலியன இல்லை. இவைகள் பொய்ம்மைக்குத் தாயகங்கள். பொய்ம்மை வழி உலகம் இயங்கும் இந்நாளில் வாழ்க்கை வரலாறுகள் வெளி வராதிருத்தல் நல்லது. அவை வெளிவருமாயின், அவரவர் வரலாற்றை அவரவரே எழுதிவிடுவது அறம். அப்பொழுதே நண்பரின் உயர்வு நவிற்சியும், பகைவரின் இழிவு நவிற்சியும் இடம்பெறா தொழியும்.

மனமாற்றம் :

தன் வரலாற்றைத் தானே எழுதுவவதைப் பல ஆண்டுகளாக யான் வெறுத்து வந்தேன். அதில் முன்னோர் வழியைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்ற எண்ணமுடையவனாகவே இருந்தேன். அணித்தே நேர்ந்த சில நிகழ்ச்சிகள் எனது மன நிலையை மாற்றின. காலதேசவர்த்தமான வேகத்துக்கு இரை யாகும் நிலைமை எப்படியோ நேர்ந்துவிடுகிறது! என் செய்வது

எனது வாழ்க்கைக் குறிப்புக்கள் ஏற்றுக்கு எழுதப்படல் வேண்டும்? என்னைப்பற்றிய அளவில் அஃது எழுதப்பட வேண்டுவதில்லையென்றே சொல்வேன். எனது வாழ்க்கை பல இயக்கங்களிலும் தொண்டுகளிலும் ஈடுபட்டது. அவைகளில் நல்ல நிகழ்ச்சிகளும் இருக்கும்; தீய நிகழ்ச்சிகளும் இருக்கும். நல்லன கொண்டும் தீயன விலக்கியும் மற்றவர் வாழ்தற்கு என் வாழ்க்கைக் குறிப்புக்கள் ஓரளவிலாதல் துணைபுரியும் என்னும் நம்பிக்கை இதை எழுதுமாறு என்னை உந்தியது. மற்றவர் வாழ்க்கைக்குத் துணைபோகும் நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில் நல்ல வழியிலோ உறுதிருப்பின், இந்நூல் எழுதும் முயற்சியில் யான் தலைப்பட்டிரேன்.

எனது வாழ்க்கை வரலாற்றை முறை முறையே கிளந்து கூறப்போகின்றேனில்லை. அதைக் கிளந்து கூற யான் எண்ணி யதே இல்லை; எண்ணியிருப்பேனாயின் நாட்குறிப்பை நிரலே பொறித்து வைத்திருப்பேன். (சிற்சில நாட்குறிப்புக்கட்குத் 'தேசபக்தன்', 'நவசக்தி', வேறு சில அறிக்கைகள் முதலியன துணை புரிகின்றன.) ஆதலின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இன் றிமையாத சிலவற்றை மட்டும் கூறு கூறாகக் குறித்துச் செல்ல முயல்கிறேன். அக்குறிப்புக்கள் எனது வாழ்க்கை நிலையை உணர்த்தும் என்று நம்புகிறேன்.

—கலைமகள்]

திரு. வி. கலியாணசுந்தரனார்

[கி. வா. ஜ.]

உச்சிக்குடுமியும் திருநீறணிந்த நெற்றியும் எளிய உடையும் கண்டவர்கள், 'யாரோ வைதிக கோஷ்டியில் ஒருவர்' என்று எண்ணும்படியிருந்தாலும், திரு. வி. க. அரசியலில் தீவிரவாதி; ஸோஷலிஸத்தை ஆதரிப்பவர். காவியம், ஓவியம் முதலிய கலைகளிலே ஊறிய நெஞ்சினர்; ஆயினும் தொழிலாளர்களிடையே நின்று தலைமை பூண்பவர். பழந்தமிழ்ச் சொற்களைத் தம்முடைய எழுத்திலும் பேச்சிலும் விரவுவித்துப் பழமையை நினைவூட்டுபவர்; எனினும் இன்று புதிதாக ஆங்கிலத்தில் வரும் புத்தகத்திலுள்ள புதுக்கொள்கையையும் ஆராய்ந்து வியந்து பாராட்டுபவர். முரண்பாடுகளாகத் தோன்றும் இவ்வியல்புகளினூடே ஒற்றுமையைக் காண்பவர். திரு. வி. க. பழமையையும் புதுமையையும் இணைத்துக் கலையையும் தொழிலையும் ஒருங்குறச் செய்து இளமையெழிலையும் முதுமையறிவையும் போற்றி வாழ்க்கை நடத்துபவர். இயற்கை வழிபாட்டிலே காதல்கொண்டு பெண்மையைப் போற்றல், விடுதலை உணர்ச்சியென்னும் கவடுவிட்டுச் சமரஸத் தென்றலிலே அசைந்து கடவுளின்பத்தை எட்டும்படி உயர்ந்து நிற்கும் திரு. வி. க. வின் கொள்கையென்னும் மலர் மரம், அறிவு குலுங்கத் தமிழ் குலுங்க ஒளிர்கின்றது. அவருக்கு எந்தக் கொள்கையும் விலக்கல்ல; அறிவும் அன்பும் உள்ள இடத்தில் அவருடைய கூட்டுறவு இருக்கும். ஆயினும் புதுமையின் பெயரால் பழமையை அழிப்பவரை அவர் கடிவார்; கடவுளின் பெயரால் தூய்மையைக் குலைப்பவரைக் கண்டிப்பார்; துறவின் பெயரால் பெண்மையை இழிப்பவரை வெறுப்பார்; தமிழின் பெயரால் பிறமொழியைப் பகைப்பவரை அவர் விரும்பார்; கலையின் பெயரால் இயற்கையைப் புறக்கணிப்பவரும் ஆராய்ச்சி வேடம் புனைந்து அழகின் வேரை அகழ்பவரும் திரு. வி. க வை உணரமுடியாது.

பண்டிதர்களுக்குப் பண்டிதர்; பத்திரிகையாளர் முன்னிலையில் ஒரு பத்திரிகாசிரியர்; இளைஞர் கூட்டத்தில் உள்ளத்தால் இளைஞராகத் தலைமை பூண்டிருப்பார்; முதியவர் கூட்டத்தில் அவருள்ளே நிலவும் காழ்ப்பை அகற்றிச் சமரஸம் பேசுவார். திரு. வி க. வின் இயல்புகளை இப்படியே வருணித்துக்கொண்டு போகலாம்.

அவர் பெரிய புராணத்திற்கு உரை எழுதியிருக்கிறார்; உணர்ச்சி எழுந்தபோது பாக்கள் புனைந்திருக்கிறார்; தினப்

17. நாயன்மார் வரலாறு
18. தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
19. தமிழ் நூல்களில் பௌத்தம்
20. கடவுள் காட்சியும் தாயுமானவரும்

சைவ - வைஷ்ணவ-பௌத்த சித்தாந்த சமரஸ நன்னூல்கள்.

21. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை

தாய்க் குலத்தின் பெருமையோடு இயற்கை வாழ்வின் அருமை பெருமைகளும் விளக்கப்படுகின்றன.

22. முருகன் அல்லது அழகு

இயற்கை அழகிலே இறைவன் அழகு காட்டும் தமிழ்க் கோயில்: ஆறு படை வீடுகளோடு கூடிய தமிழ்க் கடவுளுக்கு இந்தத் தமிழ்க் கோயிலை ஏழாவது படை வீடு என்றே சொல்லிவிடலாம்.

23. என் கடன் பணி செய்து கிடப்பதே

இந்தத் தேவாரத்திலே தமிழர்களுக்கு ஒரே பைத்தியம். இந்தப் பைத்தியத்திற்குக் காரணம் இந்தச் சிறு நூல்தான்.

24. உள்ளொளி

நீண்டகாலமாக இப்பெரியாருக்குப் பல துறைகளிலும் வழிகாட்டி வந்த "உள்ளொளி" இப்போது அச்சுவாகனம் ஏறி வருகிறது—காலத்துக்கு ஏற்ற ஒரு தமிழ்க் கோலம் பூண்டு.

2. பாட்டு

24. முருகன் அருள் வேட்டல்
25. திருமால் அருள் வேட்டல்
26. பொதுமை வேட்டல்
27. உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்

'தமிழுமில்லை, பாடலுமில்லை!' என்று சொல்லும்படி தமிழ்ப் பாடல்கள் புறப்படும் இந்த நவ யுகத்திலே, "இவை தமிழ்ப் பாடல்கள்!" என்று சொன்னாலே போதுமல்லவா? காந்தியடிகளுக்குப் பிரியமான "வைஷ்ணவன் எவன்?" என்ற பாடலுக்கு ஒரு மொழி பெயர்ப்புப் பாட்டும் 'உரிமை வேட்கை' என்ற தொகுதியில் காணலாம். "சுதந்திர நாமாவளி" சுதந்திரப் பிரியர்களுக்கும் தமிழ்ப் பிரியர்களுக்கும் ஒருங்கே புது விருந்து.

3. பழைய நூல்களுக்குப் புதிய உரை

28. காரைக்காலம்மையார் திருமுறையும் குறிப்புரையும்
29. மூலத்தின் நயங்களை நுட்பமாகக் காட்டும் குறிப்புரை
30. பெரிய புராணம்—மூலமும், அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும்

பெரிய புராணத்தை ஒரு சீர்திருத்தப் புராணமாகக் காட்டும் ஆராய்ச்சிக் குறிப்புரைகள்.

31. திருக்குறள் விரிவுரை (பாயிரப்பகுதி)

திரு. வி. க. வின் ஆராய்ச்சி அனுபவங்களுக்குத்தும் ஒரு விரிவுரை இது.

ஆன்றோர் அறவுரைகள்

"எம். எஸ். ராமசாமி"

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழ் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று.

ஃ ஃ ஃ

ஏவலாளிகளே கதியென்றிராதே. தன் கையே தனக்குதவி என்பது எல்லாவற்றிலும் மேலான நற்குணம்.

ஃ ஃ ஃ

தன்னடக்கம் மிகப் பெரியதோரு வெற்றியாகும். அதுவே நிலையான சுகத்திற்கெல்லாம் ஆதாரமாக நிற்பது.

ஃ ஃ ஃ

பகைவனுக்குப் புன்னகை புரிவது அவனை நிராயுதனுக்குவதற்கு ஒப்பாகும்.

ஃ ஃ ஃ

தவறின்றி நாம் நம்மைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வோமாக. அவ்வண்ணமாகத்தான் நான் தெய்வ அருளை முற்றிலும் பெற முடியும்.

ஃ ஃ ஃ

நித்திரையினின்று விழித்த உடனும் நித்திரை செய்வதற்கு முன்னும் கடவுளை நினை.

ஃ ஃ ஃ

நமது சுகத்தைச் சிதையாமலும் சுத்தமாயும் வைத்துக் கொள்ள வேண்டுமாயின், துவேஷ சிந்தனைகள் உட்புகுந்து கவராமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

ஃ ஃ ஃ

தலையில் பட்சிகள் கூடு கட்டிக்கொண்டு வசித்தாலும் உணர்ச்சியில்லாமல் இருக்கும் யோகிகள் உண்டு. அவர்களே பரிபூரண யோகிகளாவர்.

ஃ ஃ ஃ

சூரியன் மேகங்களைக் கலைப்பதைப் போல ஒரு புன்னகையுங் கஷ்டங்களைக் கலைக்கிறது.

ஃ ஃ ஃ

கற்களால் ஏன் கடவுளுக்குக் கோயில் கட்டுகிறீர்கள்? உங்கள் உள்ளத்திலே பொற்கோயில் கட்டுங்கள்

ஃ ஃ ஃ

ஒருவன் ஞானியானவுடன் அவனுக்குப் புதிய பார்வை ஏற்படுகிறது. தர்மராசனைப்போல அவன் எங்கும் நன்மை ஒன்றையே காண்கிறான். தெய்வ அருளின் முன் எல்லோரும் ஒரே சமானமானவர்கள்தான்

திரு. வி. க.-வின் தமிழ்ப் பணி

"கல்கி"

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தரனார் இதுகாறும் இயற்றியுள்ள தமிழ் நூல்களின் விவரம் வருமாறு:—

1. வசனம்

1. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
2. இந்தியாவும் விடுதலையும்

இந்த இரண்டு நூல்களையும், ஒரு சிறந்த செந்தமிழறிஞரின் உள்ளத்திலே ஊறி வெளிப்பட்ட அரசியல் கொள்கைகளின் 'சிவஞானபோத' மென்றும் 'திராவிடமாபாடிய' மென்றும் சொல்லலாம். முதலாவது நூல், நம் தமிழ் நாட்டிலே 'காந்தி தர்ம'த்தைக் குறித்து வெளியிடப்பெற்ற நூல்களிலெல்லாம் முதன்மையானது.

3. தமிழ்ச் சோலை
4. தமிழ்த் தென்றல்

அரசியலும், பொருளாதாரமும், சகோதர நேசத்தையும் ஆதாரமாகக் கொண்டு, தமிழ்ச் சோலையாகத் தழைத்திருக்கின்றன; தமிழ்த் தென்றலாகவும் வீசித் தமிழருக்கு ஊக்கமும் ஒரு புதிய உயிரும் தருகின்றன.

5. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
6. முடியா? காதலா? சீர்திருத்தமா?
7. இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

இந்த மூன்று சீர்திருத்த நூல்களும் 'சாது' முதலியாரின் புரட்சிகரமான சில அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன; இப்பெரியாரது இளமை யுள்ளத்தை இனிது புலப்படுத்துகின்றன. 'கண்மூடி வழக்க'ங்கள் 'மண்மூடி'ப் போகவேணுமென்பது ராயப்பேட்டை முனிவர் சாபம். (இராமலிங்க சுவாமிகளின் திருவுளப்படியே.)

8. சைவத்தின் சமரசம்
9. சைவ சமய சாரம்
10. சைவத்திறவு
11. சமரச சன்மார்க்கத்திறவு
12. சமரச சன்மார்க்க போதம்
13. சமரச தீபம்

இந்த ஆசிரியர் தமக்குச் "சிவஞான போத"மும் "சமரச சன்மார்க்க போத"மும் ஒன்றே என்பதை இந்த "ஆறுமுக"மான நூல்கள் வாயிலாகத் தெளிவுபடுத்துகிறார்.

14. இமயமலை அல்லது தியானம்
15. நினைப்பவர் மனம்
16. சித்த மார்க்கம்

உலகத்திற்கே ஒரு கங்கையாகிய சமரஸ சித்தமார்க்கம், இமயமலையாகிய பனிக் கோயிலில் தோன்றி, "நினைப்பவர் மன"மாகிய கோயில்களை யெல்லாம் வளமுறச் செய்கிறதென்பதை வெளியிடுகின்றன இம்மூன்று நூல்களும்.

பத்திரிகை, வாரப்பத்திரிகை, திங்கள் வெளியீடு முதலிய பல பத்திரிகைகளை நடத்தியிருக்கிறார். சொற்பொழிவுகள் பொழிந்திருக்கிறார்; வசன நூல்கள் எழுதியிருக்கிறார்; எல்லாவற்றோடும் திரு. வி. க. வின் நெறிபொன்று தனி நின்று ஒளி விடும். எளிமை அவர் செயல்; தமிழ் அவர் உரை; சமரஸம் அவர் உள்ளம். அவர் சிறந்த சிந்தனையாளர் கூட்டத்திற் சேர்ந்தவரென்பதை அவர் எழுதியுள்ள 'பெண்', 'முருகன்', 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' முதலிய புத்தகங்கள் தெளிவாக்கும்.

திரு. வி. க. தம்முடைய வாழ்க்கையில் தலைமை பெற்ற நிகழ்ச்சிக் குறிப்புக்களை எழுதிவருகிறார்; புத்தக உருவில் வெளிவரும். காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றும் இவர் இங்ஙனம் செய்தல் மிகவும் பொருத்தமுடையதே. தமிழில் சுய சரிதத்தை முதல் முதலாக டாக்டர் சாமிநாதய்யரவர்கள் எழுத முன்வந்தார்கள். திரு. வி. க. வின் வரலாற்றுக் குறிப்பின் தோற்றுவாயை வெளியிடுகிறோம்.

—கலைமகள்

மறவா நாட்கள்

[ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்]

காந்தியவர்கள் இந்திய அரசியலில் தியாகமும் துணிச்சலும் புகுத்திய காலம் இருபத்துநான்கு ஆண்டுகளுக்குமுன். அப்போது தென்னாட்டில் எதிர்ப்பை விட்டுவிட்டுப் பொறுப்பை எடுத்துக்கொண்ட நான்கைந்து தலைவர்களில் ஒருவர் ஸ்ரீமான் திரு. வி. க. அவர்கள். பகைமையும் ஆகுலமும் போய் அமைதியும் நோன்பும் சாதனங்களான அதிசயத்தைக் கண்ட நாட்கள் - ஆங்கிலப் பிரசங்கங்கள் போய்த் தமிழன்றி வேறு பேச்சுத் தெரியாத பாமரர்களிடையே வேலை துவக்கிய புரட்சி நாட்கள் - தொழிலாளர்களைத் திரட்டிச் சங்கம் நிறுவும் அபாயநெறி முதல் முதலில் தோன்றிய நாட்கள் - அப்போது சுகமான பள்ளித் தொழிலை விட்டு அரசியல் அலைகடலில் புகுந்தவர் ஸ்ரீ திரு. வி. க. அக்காலத்தில் வேலை செய்த அரசியல் தொண்டர்களுக்குத்தான் தெரியும் திரு. வி. க. உள்பட எங்கள் சிலருக்குள் வளர்ந்த அன்பும் கட்டுப்பாடும் கூட்டுறவும். பிறகு எவ்வளவோ சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன. ஆயினும் அவருடன் கூடி நாங்கள் சிலர் அந்நாட்களில் செய்த தொண்டில் கண்ட மகிழ்ச்சியை என்றும் மறக்க முடியாது.

கவி: ரவீந்திரர் மொழிபெயர்ப்பு: ரா. பார்வதிதேவி

இரண்டு படங்கள்

வஸந்தருதுவிலே மிக்க ரமணீயமான ஒரு காலை நேரம், எங்கு பார்த்தபோதிலும் இனிமையாகக் கூவும் பறவைகளின்கூட்டம். பூமியில் அங்கு மிங்குமாக முளைத்தெழுந்த பூஞ்செடிகள். இயற்கையன்னை மிக டாம்பீகமாக உடுத்தி ஆடையாபரணங்கள் அணிந்து கொலுவீற்றிருந்தனள். கல்கத்தாவில் புழுதி நிறைந்த வீதியொன்றில் குறுகிய அறையொன்றில் வசித்து வந்த சித்திரமெழுதும் திறமைகொண்ட கவி யொருவன் அவ்விளங்காலையின் மாக்ஷிமையைக் கண்டு மகிழ்ந்தவனாய் நகரத்திற்கு வெளியிலே வெகு தூரம் சென்று உலாவி விட்டுத் திரும்புகையில் ஏதோ ஒரு எளிய குடிசையினருகில் வந்து சேர்ந்தான். அவ்விடம் இயற்கையான அழகு ததும்பி நின்றது. அங்கே ஒரு வீட்டின் வாயிலிலே உட்கார்ந்திருந்த வெகு அழகான ஒரு குழந்தையைக் கண்டு அவன் பிரமித்து நின்றான். ஏனெனில் அந்தக் குழந்தையினிடம் மாசு, களங்கம், முதலிய தோஷங்கள் எள்ளளவும் இன்றி அது தெய்வீகத் தன்மை நிறைந்து நின்றது. உடனே கவி தன் புத்தகத்தையெடுத்து அக்குழந்தையைச் சித்திர ரூபமாக வரைந்து, அதனடியில் "ஒளிச்சுடர்" என எழுதினான்.

வருடங்கள் பல சென்றன. சித்திர விற்பன்னனின் புகழ் எங்கும் பரவிற்று. அவன் ஒரு தினம் தனது பழைய புத்தகங்களைப் பார்க்கும்பொழுது இக் குழந்தையின் சித்திரத்தைக் காண நேர்ந்தது. இன்பம் நிறைந்த அந்த சந்தர்ப்பங்கள் யாவும் நினைவுக்கு வந்தன. அந்தச் சித்திரத்தை அவன் பூர்த்தி செய்வித்ததும், அது உயிருள்ள குழந்தையெனவே தோன்றியது. அமைதியும் சாந்தமும் தூய்மையும் மாசற்ற தன்மையும் களங்கமில்லாத ஒளியும் உருவெடுத்து வந்தன போலத் தோன்றின.

ஃ

கவிக்கு ஒரு யோசனை பிறந்தது. இந்த சாந்த மூர்த்தியான குழந்தைக்கு நேர் விரோதமான தன்மைகொண்ட ஒரு மனிதனைக் கண்டுபிடித்து அவனையும் சித்திரத்தில் வரைந்து அதனடியில் 'இருண்ட மூதேவி' என எழுதி இருபடங்களையும் பக்கம் பக்கமாகத் தொங்கவிடவேண்டுமென அவனுக்கு ஆசையுண்டாயிற்று. உடனே அவன் மூதேவியின் கடாக்ஷம் பெற்றவர் வாழ்கின்ற சிறைச்சாலை, குடிச்சாலை முதலான இடங்களுக்குச் சென்று தேடினான். வெகுநாள் கழிந்த பின்னர் அவனுக்குத் திருப்தியான ஒருமனிதன் அகப்பட்

டான் அவனது முகத்தில் எண்ணிறந்த பாபங்களின் அடையாளங்களிருந்தன. கடுமையும், வெறுப்பும் கொடுமையும், பொய்யும், மற்ற மகா பாதங்களும் அவனையே சரணுக அண்டியிருந்தன. அவன் முகத்தைக்கண்டோரனைவரும் திடுக்கிட்டுச் சென்றனர். அவன் தனது தாயைக் கொன்ற குற்றத்திற்காக அப்பொழுது சிறையிலிருந்தான்.

அவனது சித்திரத்தை வரைந்ததும், கவியானவன் தான் எழுதிய இரு படங்களையும் எடுத்து வந்து முதலில் சிறையிலிருந்த அந்த கொலைகாரப்பாவியினிடமே காட்டி, தான் குழந்தையின் படத்தை எழுதிய வரலாற்றையும் கூறினன். அதன் பின்னராவது அவனது மனம் நல்வழியில் திரும்பட்டும் என்பது நமது கவியின் நோக்கம்.

படங்களைக் கண்டதும் கைதி "கிரீச்" என்று கதறிக் கீழே விழுந்தான். பின்பு கண்களைக் கையினல் மூடிக்கொண்டு கவியை நோக்கிக் கூறலானுன்; "ஐயா! இப்போது தாயைக் கொன்று சிறையில் வாழும் நான்தான் ஒருநாள் அக்குழந்தையாக இருந்தேன். தாங்கள் என்னைச் சித்திரத்தில் வரைந்தது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. ஆனல் எனக்கு வயது வந்த பிறகு நான் சகவாச தோஷத்தினல் கெட்டுப்போனேன்; குடியே என்னை இக்கதிக்குட் படுத்தியது. என் அன்னையின் சொல்லையும் நண்பர்களின் பேச்சையும் கேளாமல் நான் இவ்விதம் ஆனேன். ஒளிச்சுடரென என்னை எவரும் வியக்கும்படி என் வாழ்வைத் தொடங்கிய நான், இருண்ட மூதேவியாக வாழ்வை முடிக்கின்றேன்" என்ருன். சித்திர விற்பன்னன் இதைக் கேட்டுத் திகைத்துச் சோர்ந்தான்.

தமிழன்பர் மலர்

கலை உலகிலே ஒரு இலட்சிய சிருஷ்டி!

தமிழ்நாட்டின் பிரசித்திபெற்ற எழுத்தாளர்கள்
தங்களது எழுத்தோவியங்களால் மலரை அலங்கரிக்கிருர்கள்.

விவரங்கட்கு:—

P. V. அனந்தநாராயணன்,
தமிழன்பர் நிலையம்,
ஜாபர்சா தெரு. :: திருச்சினுப்பள்ளி

ஹாஸ்ய நாடகம்

ஜீவ சக்தி

ஸ்ரீமதி பத்மாபாய்

காட்சி 1

பாத்திரங்கள்

சங்கரன்	ஒரு ஆபீஸ் குமாஸ்தா
சம்பத்து	சங்கரனுடைய ஆபீஸ் நண்பன்
வனஜா	சங்கரன் மனைவி
மரகதத்தம்மாள்	சங்கரன் தாய்
சுப்ரமண்ய அய்யர்	சங்கரன் தந்தை

இடம் கடைத்தெரு. காலம் மாலை

[சம்பளம் கைக்குவந்த சமயம். சங்கரனும், சம்பத்தும் பேசிக்கொண்டே வருகிறார்கள்.]

சம்பத்து:—என்ன பிரதர்! இந்த தடவை ஜார்ஜெட் சாரி மேலே உங்களுக்கு நினைவு போய்விட்டது?

சங்கரன்:—அதையேன் கேட்கிறீர்கள்! ஒரு மனுஷ்யனுக்கு ராத் தூக்கமே இல்லாதிருந்தால் பிறகு எப்படித்தான் வேலை ஓடும்?

சம்பத்து:—வீட்டிலென்ன கொசு, மூட்டை பூச்சியெல்லாம் வளர்க்கிறீர்களோ?

சங்கரன்:—அதொன்றுமில்லை சம்பத்

சம்பத்து:—அப்படியானால், நீங்கள் உடனே ஒரு டாக்டரிடம் உடம்பை காட்டவேண்டும்.

சங்கரன்:—டாக்டர் என்ன அப்பா பண்ணுவார் பாவம்! எதற் கெடுத்தாலும் எதாவது ஒரு சிகப்பு நீரை சீசாவில் நிரப்பி கொடுப்பார்.

சம்பத்து:—அப்படியானால் ஜவுளி கடையில் தூக்கம் வருகிற மருந்து கிடைக்கிறதா என்ன?

சங்கரன்:—(சிரித்துக்கொண்டே) சம்பத்! நீங்களோ பிரம்மச்சாரி! உங்களுக்கு இந்த ஜவுளி கடை மருந்து விஷயமெல்லாம் எங்கே தெரியபோகிறது. ஒரு சில்க் புடவை கொண்டு போய், நம்ம ஸஹதர்மினிக்கு கொடுத்துட்டேன்னு, அப் புறம் நிம்மதியாய் தூங்குவேன்.

சம்பத்து :—(உரக்க சிறித்துக்கொண்டே) ஓஹோ! பலே தூக்கத்தை கெடுக்கிறது யாருன்னு இப்ப தெரிஞ்சது விஷயம். உம். நடக்கட்டும் இதோ சுலோசனு ஜவுளி ஸ்டோரில் புது விற்பனையாம். இங்கே நுழையலாம்.

2

இடம் சங்கரன் வீடு காலம் காலை

[வனஜா சந்தோஷமுடன் ஓடியாடி வேலை செய்கிறுள். மாமியார் மரகதத்தம்மாள் அதை பார்த்து பொறுமுகிறுள். சங்கரன் தோளில் கோட்டை மாட்டிக்கொண்டு ஆபீஸிற்கு கிளம்புகிறுன்.]

சங்கரன் :—(பேனவை கோட் பையில் சொருகிகொண்டே) யாரடீது! உன்னைத்தானே!

வனஜா :— ஏன்னு! இதோ வந்துட்டேனே........

சங்கரன் :—(அவள் முகத்தை பார்த்தபடி) ஆபீஸிற்கு போய்ட்டு வரேன்.

வனஜா:—(சிரித்துக்கொண்டே) சரி, போய்ட்டு வாருங்க. ராத்திரி ரொம்ப நாழியாக்காதேள். சீக்கிரமாகவே வந்துடுங்கோ.

மாங்கம்மா சபதம்

வசுந்தரா....ரஞ்சன்
கிருஷ்ணன்.மதுரம்

சென்னை
ஸாகர்...கிரௌன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும் பல முக்ய நகரங்களிலும்
வெற்றியுடன்
நடைபெறுகிறது

சங்கரன் :—ரைட்டோ !

[சீட்டியடித்துக்கொண்டே விர்ரென்று வெளியே போகிறுன். வனஜா ஓய்யாரமாக உள்ளே போகிறுள்.]

வனஜா :—என்ன அம்மா, சாப்பிட நாழியாச்சே வரேளா ?

மாமியார் :—என்னடி இது ? ஒருநாளுமில்லாத திருநாள் !

வனஜா :—இல்லேயம்மா ! பசியாயிருக்கேளேன்னு கேட்டேன்.

[மாமியார் வலிப்பு காட்டுகிருள்]

[ஞாயிற்றுக்கிழமையாதலால் சங்கரன் சாவகாசமாய் சாப்பிடுகிருன். புது புடவை கட்டிக்கொண்டு சந்தோஷமாய் பரிமாறுகிருள் வனஜா. சாப்பிட்டபின் சங்கரன் நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிருன், தாயார் எதிரில் உட்கார்ந்து கொண்டிருக்கிருள்,]

தாயார் :—உம். எல்லாம் கொடுத்து வைத்திருந்தால்தானே கிடைக்கும் ?

சங்கரன் :—என்ன அம்மா இது ?

தாயார் :—எனக்கொரு புடவை வாங்கணும்னு சொன்ஞ உனக்கு இல்லாத செலவெல்லாம் வந்துடும்.

சங்கரன் :—என்னம்மா செய்ய சொல்றே ! உனக்குமட்டும் வாங்கி தரமாட்டேன்னு யார் சொன்ஞ ? உனக்கும் வாங்கி தரனே !

தாயார் :—நீ என்னடா செய்வே ? அவள் உபதேசம் தலேக்கு ஏறிபோச்சு !

சங்கரன் :—ஐயோ ! இதென்ன ரோதனேயாய் போச்சு !

தாயார் :–என் பேச்சு உனக்கு ரோதனேயாய்த்தான் தோன்றும் அவள் பேசினுல் ?........

சங்கரன் :—சீ ! இந்த வீட்டில் ஒரு நிமிஷம்கூட நிம்மதியாயிருக்க முடியாதப்பா ! (பத்திரிகையை வேகமாக மடித்துக்கொண்டு வெறுப்புடன் எழுந்து) இந்த ஆபீஸிலே இந்த லீவு என்று ஏன் வந்து தொலேகிறது. [வெளியே போகிறுன்]

வனஜா :—ஏனம்மா இப்படி கோவிச்சுக்கறேள் ! அக்கம்பக்கத்திலே இருக்கிறவா சிரிக்கப்போரு.

மாமியார் :—சிரிக்கமாட்டார்களாடி அவா ! உன்னேப்போல ஒரு மாட்டு பெண் வாய்ச்சத்துக்கு ? உன்னண்டே இந்த பேச்சு கேக்கணும்னு தலேயெழுத்தா ?

[அழுதுகொண்டே பிள்ளேயின் அறைக்குள் செல்கிருள், அங்கு ஓர் அலமாரியில் 'விஷம்' என்று எழுதிய புட்டி ஒன்றிருக்கிறது. அதை யெடுத்து பார்க்கிருள்.]

மாமியார் :—எத்தனை நாள்தான் இவளிடம் இடிபட்டுக்கொண்டு கிடக்கிறது. இதை சாப்பிட்டு ஒழிஞ்சு போய்ட்டா சங்கரனுவது நிம்மதியாயிருப்பான்.

4

புட்டியை திறந்து கைகள் பதற குடிக்கிருள். மறு நிமிஷம் 'ஐயோ' என்று விழுகிருள். அதைகேட்டு வனஜா அங்கு ஓடி வருகிருள்.

வனஜா :—அம்மா! அம்மா!! என்ன செய்துட்டேன் (விஷ புட்டியை பார்த்து) விஷமா குடிச்சேள்! ஐயோ! நானென்ன செய்வேன்!

[அங்குமிங்கும் ஓடுகிருள். விஷ புட்டியை எடுத்து அலமாரியில் வைக்கிருள். மாமியாரோ அப்பா! அம்மா! என்று முனகுகிருள். இந்த ரகளையின் சப்தத்தை கேட்ட சங்கரனும், அவன் தந்தை சுப்ரமண்ய அய்யரும் ஓடி வருகிருர்கள்.]

சங்கரன் :—என்னடீது? என்னபண்ணிவிட்டே!

V 50 வருஷ அனுபவமுடையதும், உலகப்பிரசித்தி பெற்றதும், பிரபல டாக்டர்களாலும், ஆல் இந்தியா எக்ஸிபிஷன்களிலும் கோல்டு, சில்வர் மெடல் சர்டிபிகேட் பெற்றதுமான V

தென்னமரக்குடி எண்ணெய்

மேலுக்கும்,

தேவகல்ப தென்னமரக்குடி சூரணம்

உள்ளுக்கும்

இது குழந்தைகள் மாந்தம், வயிற்றுக் கட்டி, கக்குவான், கணை, இழுப்பு. ஆண் பெண் வெட்டை, மலச்சிக்கல், வயிற்று வலிகள், தலை வலி, பல் வலி, காலரா. வாந்தி, சீதபேதி, ரத்த பேதி, மூலம், அன்னத்வேஷம் முதலிய சகல நோய்களுக்கும், பாம்பு, தேள், நாய், எலி முதலிய சகல விஷங்களுக்கும் நிகரற்ற குணமளிக்கும். தற்புகழ்ச்சியல்ல. உத்திரவாதமுடையது.

தேவகல்ப பாட்டல் 1க்கு ரூ. 1—4—0
தென்னமரக்குடி டின் 1க்கு ரூ. 0-10—0

எல்லா ஊர் மருந்து, மளிகை ஷாப்புக்கடைகளிலும் கிடைக்கும்.

Manufacturer:—**Dr. R. S. கிருஷ்ணு**, மாயவரம்.

வனஜா :—அழ ஆரம்பித்து நான் சிவனேன்னு இருந்தேன். என்னமோ தடால்ன்னு சத்தம் கேட்டது. ஓடிவந்து பார்த்தா, அம்மா கீழே விழுந்திருந்தார். பக்கத்திலே 'விஷம்'னு போட்ட புட்டி ஒண்ணு கிடந்தது.

சங்கரன் ;—திடீரென்று கீழே குனிந்து ஐயையோ! அம்மா இதென்ன இப்படியும் அநியாயம் உண்டா? எங்கே அந்த புட்டியை கொண்டு வா (வனஜா உள்ளே ஓடுகிறுள்) அப்பா சீக்கிரம் டாக்டரையாவது கூட்டிண்டு வரணுமே!

தாயார் :—(முனகிகொண்டே) அப்பா! வேண்டாண்டா நான் கண்ணை மூடிணலாவது நீங்கள் சுகமா இருப்பீர்கள்.

சங்கரன் :—அம்மா! அப்படி சொல்லாதே அம்மா.

[வனஜா புட்டியை எடுத்துக்கொண்டு வருகிறுள்]

வனஜா :—இதைத்தான் சாப்பிட்டுட்டார்.

சங்கரன் :—(அவள் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கி பார்த்ததும் அவன் கண்கள் கோபத்தைக் காட்டுகிறது) அட ராமா! இதையா சாப்பிட்டுட்டா?

வனஜா :—ஆமாம்

சங்கரன் :—அட கர்மமே! காரியம் கெட்டன்னு போச்சு! என் தலைவிதி.

வனஜா :—ஐயோ! உங்களுக்கு என்ன?

சங்கரன் :—நாளுக்கு நாள் என் உடம்பு துரும்பா இளைச்சு போறதேன்னு ஐம்பது ரூபாய் செலவழிச்சு இந்த 'ஜீவ சக்தி' மருந்தை வரவழைத்தேன். எங்கே நீங்களெல்லாம் தொட்டுடுவேளோன்னு அதுமேலே விஷம் என்று எழுதி வச்சேன் அதை பூராவும் அம்மா குடிச்சுட்டாளே

வனஜா :—அதனுல் என்ன?

சங்கரன் :—என்னவா? இன்னிக்கி ராத்திரி போதுபோய் நாளை விடியரத்துக்குள்ளே அம்மா சின்ன பொண்ணுமாதிரி ஆயிடப்போறு! அதனுலே அப்பாவுக்கும் வேறே இந்த மருந்து ஒரு புட்டி தயார் செய்தாகணும்.

[இதுவரையில் பிரமித்து நின்றிருந்த சுப்ரமண்ய அய்யரும் விவரமறிந்து வயிறு குலுங்க சிரிக்கத்தொடங்கினர். தனயனும் தந்தையுடன் சேர்ந்துகொண்டான் வனஜாவும் தாயாரும் பிரமித்து நிற்கிறுர்கள்.

ஐக்ய வணக்கம்

1. ஆற்றல்கள் அனைத்தும் நீயே!
அருளுவாய் எனக்கும் ஆற்றல்
போற்றிடும் வீரியம் நீ!
எனக்கதைப் புகட்ட வேணும்
மாற்றரும் பலங்கள் நீயே!
மற்றெனைப் பலவா னுக்கு
சாற்றரும் ஜீவ சத்தே!
சத்தினை எனக்கும் தாராய்.

2. உடலினும் உயிருக் கப்பால்
உயர்ந்தொளிர் ஆன்ம சக்தி!
கடலினும் பெரிதாம் உந்தன்
கருணையில் முழுகச் செய்வாய்
அடைவரும் அமைதி தந்து
அன்பெனும் அமுதம் ஊட்டி
மடமைகள் யாவும் மாற்றி
மங்களம் அருள்வாய் போற்றி!

ஹாஸ்யத்தில் ஓர் அற்புத
சிருஷ்டி!

✱ இன்றைய சமூகத்தின் ✱
✱ இன்னலை விளக்கும் ✱
✱ இணையற்ற சித்திரம் ✱

திவான் பகதூர்

டைரெக்ஷன்:
T. R. சுந்திரம் B.A., B.S.C leeds

கதை: ஹரிதாஸ்
பாடல்கள்: வேல்சாமி கவி

நக்ஷத்திர நடிகர்கள்
அனைவரும் நடிக்கிறார்கள்.

தயாராகிறது

— விபரங்களுக்கு —
மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்
சேலம் — மதுரை

நல்ல விதமான
விளம்பரமே
வியாபாரத்திற்கு
அழகு

ஆப்டோன்
பிளாக்குகள்,
அழகிய
கலர்
பிளாக்குகள்

செய்யுமிடம்:
**M. C. அப்பாசாமி செட்டி
அண் கோ,**
14, ஜோன்ஸ் தெரு,
மண்ணடி, :: மதருஸ்.

இம்பீரியல் பிரஸ், பெரியகம்மாளத் தெரு, திருச்சி-43